விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 28 சனிக்கிழமை (14.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330




# இலங்கையில் அரசியல் குழப்பம்;

# ஆராய இன்று வருகிறார் முகர்ஜி

## பொன்சேகா மற்றும் ஜனாதிபதியை சந்திப்பார்



பிரணாப் முகர்ஜி


(புதுடில்லி)

இந்தியமத்தியநிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி இரண்டு நாள் பயணமாக இன்று கொழும்புக்கு வருகிறார் ஜனாதிபதி ராஜபக்ஷவை எதிர்த்து ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக செய்திகள் வரும் நிலையில் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. மேலும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக உள்ள எஸ்.எம்.கிருஷ்ணா இதுவரை கொழும்பு போகாத நிலையில் நிதியமைச்சராக இருக்கும் பிரணாப் முகர்ஜி கொழும்பு போவதும் கேள்விகளை எழுப்பியுள்ளது.


(14ஆம் பக்கம் பார்க்க)



மகிந்த ராஜபக்ஷ



ரணில் வி[illegible]மசிங்க



சரத் பொன்சேகா

## கனகரத்தினம் எம்.பி. நீதிமன்றத்தில் ஆஜர்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீதான விசாரணைகள் இன்னும் முற்றுப் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து யாழ்.வர பாதுகாப்பு நடைமுறை தளர்வு

### பாதுகாப்பு அனுமதி பெற்றே யாழிலிருந்து செல்லமுடியும்

(கொழும்பு)

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொது மக்கள் வருவதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இத்தளர்வு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்கான நடைமுறையில் எந்தவித மாற்றமும் இல்லை என பலாலி படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது. யாழ்ப் (14ஆம் பக்கம் பார்க்க)

## தனித்துவத்தை பேண வேண்டிய தேவை இலங்.தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது

### அதன் யாழ். செயலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த ஒரு சிலர் வெளியிட்டு வரும் கருத்துக்களுடன் தாம் உடன்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் கூ.சே.குலநாயகம் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலை ஒட்டி ஏற்படுத்தப்பட் (14ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைக்கழக தமிழ் மாணவி கடத்தல்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த தமிழ் மாணவியொருவரை புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறிக்கொண்ட சிலர் நேற்று முன்தினம் கடத்திச் சென்ற சம்பவம் சந்தேகத்தைஏற்படுத்தியுள்ளது என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் (14ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் இராஜினாமாவை ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

சேவையில் இருந்து ஓய்வுபெற தம்மை அனுமதிக்குமாறு கூட்டுப்படை தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகாவினால் கடித மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த விடயம் ஜனாதிபதி உரிய பணிப்புரைகளை ஜனாதிபதியின் செயலாளருக்கு விடுவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஓய்வு அனுமதி (14ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுமக்கள் எதிர்பார்த்த சமாதானம் கிடைக்கவில்லை

### ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் இறுதியில் முழுநாடும் எதிர்பார்த்த சமாதானத்தின் பிரதிபலன்கள் இன்னமும் கிடைக்கவில்லை என ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

16 சம்பவங்களை உள்ளடக்கி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதத்தில் இரகசியமாக இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பொருளாதாரக் கஷ்டங்கள் (14ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.நகரில் ஒரு மணித்தியாலத்தில் டிஜிற்றல் பனர் பிறிண்டிங்



விளம்பர பதாகைகள்:
வாகன ஸ்ரிக்கர் மற்றும்
படங்கள் கொழும்பு
விலையில் பிறிண்டிங் செய்து கொள்ளலாம்.

கொனிக்கா கலர் லாப் &
சிறி டிஜிற்றல் கலர் லாப்
14, சிறி வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:-0212223493

(C-3718)

# ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்றோர்

**தொண்டர் ஆசிரியர்களாகவிருந்து ஆசிரிய உதவியாளராக நியமனம் பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் விபரம் வெளியாகியுள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று வீரசிங்கம் மண்டபத்தில் மாலை ஒரு மணிக்கு நடைபெறும். நியமனக் கடிதம் பெறவுள்ளவர்கள் ஆசிரிய உடையில் சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**

திருமதி சந்திரசேகரம்பிள்ளை செல்வராணி (சரசாலை வடக்கு), சின்னத்துரை துரைராணி (மந்துவில் மேற்கு),கமலராணி இராசையா (இமையாணன்),சிவலிங்கராசா தெய்வரதி (கரணவாய் தெற்கு),மதிவதனி ரகு (உடுப்பிட்டி),சிவகுணா சுந்தரநாதன் (மட்டுவில் தெற்கு),வாசுகி மகிந்தரராசா (மல்லாகம்),கிருஸ்ணன் திருச்செல்வம் (மட்டுவில் கிழக்கு),திருச்செல்வம் விஜயசிறி (மட்டுவில் கிழக்கு),வாசுகி அன்றன் ராஜசேகரம் (யாழ்ப்பாணம்),பாமா தர்மராஜா (அரியாலை), மகாதேவன் தவக்குமார் (இணுவில் மேற்கு), பத்மவதனி பாலசிங்கம் (கோப்பாய் தெற்கு), சிவசாந்தி சிவம் (இமையாணன்).

சத்தியதேவி சிவகுமாரன் (உடுவில் மேற்கு),இராகினி இரத்தினமணி (சரசாலை தெற்கு), செல்வநாயகி வடிவேலு (கைதடி தெற்கு),சத்தியபாமா இராசலிங்கம் (கைதடி தெற்கு),இயூஜின் மனைட் கற்பகவதனம் (சுன்னாகம்), சிவதாஸ் சிவகாந்தன் (மட்டுவில் கிழக்கு),செல்வரட்ணம் மோகநாதன் (கோப்பாய் தெற்கு),கபேரியல் ஜெனோபா உரும்பிராய் கிழக்கு),யொனிற்றா மெலானி கியூமன் (கரம்பன் கிழக்கு),றோகினி கேதீஸ்வரன் (வட்டு தெற்கு),வத்சலா திருமேனி (குயவன்புலம்).

நந்தா மணிராஜன் (பொலிகண்டி), கமலேஸ்வரி சண்முகநாதன்(சுழிபுரம் மத்தி), கஸ்தூரி பாலசுப்பிரமணியம் (சங்கானை), மஞ்சுளா நடராசா (சண்டிலிப்பாய் வடக்கு), சுலோசனா சீவரட்ணம் (யாழ்ப்பாணம்), சுகிர்தா முருகானந்தம் (நாவற்குழி தெற்கு), மதனரூபி பாரதிதாசன் (அல்வாய் வடக்கு), லலிதா ஜெயக்குமார் (சாவகச்சேரி), திருநாவுக்கரசு ரூபாகரன் (மூளாய் மேற்கு).

சுகிர்தா பரமானந்தம் (கொக்குவில் மேற்கு), சண்முகநாதன் நகுலேஸ்வரன் (கரவெட்டி கிழக்கு) சுகீதா கருணானந்தசிவம் (ஆனைக்கோட்டை),வில்லியம் அன்றன் மேரி சுரேகா (பருத்தித்துறை),அன்ரலின் றயிதா மங்களதாஸ்(மருதடி வீதி),ஜெயதா ஜோர்ஜ் பீற்றர்சன் (சென்ற் றிக்ஸ் வீதி), தனபாலசிங்கம் சகிலன்(கொடிகாமம்),ராதாலக்சுமி லோகசுப்பிரமணியம் (களபூமி),வத்சலா சந்திரகுமாரன் (கொக்குவில் மேற்கு).

வல்லிபுரம் கிருஸ்ணவேல் (கற்கோவளம்), சிவரூபி நமசிவாயம் (காரைநகர்),முருகன் சதீஸ் (கோப்பாய் தெற்கு),துஸ்யந்தி கிருஸ்ணபிள்ளை (குடத்தனை மேற்கு),துஸ்யந்தினி பிரதீபன் (ஆவரங்கால் கிழக்கு),சோபிகா சிவபாலன் (நயினாதீவு),யான்சி துரைராஜா (கோண்டாவில்),அகிலேஸ்வரன் பிரதீபன் (நவக்கிரி),சொரூபா கண்ணதாசன் (கொட்டடி), யோன்பிரிட்டோ ஜெரால்டின் தனுசியா (கோப்பாய்).

பாலசிங்கம் பிரதீபா (அச்சுவேலி வடக்கு), சுந்தரலிங்கம் தர்சினி(வல்வெட்டித்துறை), யோகலிங்கம் தர்மினி (இருபாலை கிழக்கு). தாட்சாஜினி முத்துராசா (நவாலி தெற்கு), பத்மசுதர்சினி கிருஸ்ணகோபால் (துன்னாலை கிழக்கு),சுதர்சினி பாலசுப்பிரமணியம் (வியாபாரி மூலை),ஜெயசந்திரன் வக்சலா (வல்வெட்டித்துறை),சகுந்தலாஜினி இரவீந்திரதாசன் (யாழ்ப்பாணம்),சசிகலா செல்வராசா (யாழ்ப்பாணம்),பற்றிமாவனுஷ்மேரிறைட் அலெக்ஸ் (யாழ்ப்பாணம்),சோதிநாதன் கீர்த்தனா (கோண்டாவில் வடக்கு),ஏ.யெருதா (யாழ்ப்பாணம்).

சங்கரப்பிள்ளை கருணாகரன் (நெடுந்தீவு),மயூதினி யூட் நிக்ஸன் (நெடுந்தீவு),சர்மிலா வடிவேலு (நயினாதீவு),ஜீவதர்ஷினி இலட்சுமணன் (நெடுந்தீவு),அமலசெல்வி பத்மராஜன் (எழுவை தீவு),தர்மலோஜினி சதீஸ்வரன் (புங்குடுதீவு),ஞானரத்தினம் அன்றன் செல்வராஜ் (புங்குடுதீவு),பாலச்சந்திரன் கஜதீபன் (ஏழாலை தெற்கு),ஞானரத்தினம் அன்றன் அமலராஜ் (புங்குடுதீவு),ஜெயந்திநாதன் நந்தகுமாரன் (கொடிகாமம்).

பரமேஸ்வரி அனோஜதன் (புலோலி மேற்கு),ஜெசிந்தா பாமினி இரத்தினசிங்கம் (நெடுங்கேணி),துஸ்யந்தினி ராஜசங்கர் (அல்வாய் தெற்கு),தாட்சாஜினி முத்துராசா (நவாலி தெற்கு),சுதாஜினி சிவதாசன் (சில்லாலை வடக்கு),மகேந்திரகுமார் ஆறுமுகம் (பண்டத்தரிப்பு), இராஜேஸ்வரி சுப்பன் (உடுவில்), கந்தசாமி சுதேஸ் (அல்வாய்),ராதிகா ராஜேந்திரா (ஆவரங்கால் மேற்கு),ஞானசேகரன் ஜெயசுபாஜினி (சுச்சேரி நல்லூர் வீதி),செல்வரதி செல்வராஜா (கோப்பாய் மத்தி),பிரியதர்சினி ஜெயருபன் (பருத்தித்துறை),கோகுலம் செல்லத்துரை (ஆவரங்கால் மேற்கு).

பாலசுந்தரம் லஜிதா(சுன்னாகம் வடக்கு), சுகந்தினி யோகராசா (சுன்னாகம் வடக்கு), சுமித்தி தம்பித்துரை (வட்டுக்கோட்டை), வாசுகி பொன்னுத்துரை (நாகர்கோவில்),பிறேமலதா பிரபாகரன் (கொக்குவில்),தாரணி ராஜேந்திரம் (சுன்னாகம்),நவரத்தினம் கலைவாணி (துவாடி கிழக்கு),சரவணன் சுதிகலன் (ஐயனார் கோவிலடி).

பற்குணலிங்கம் பிரசாந்தன் (சுன்னாகம்), இராஜரத்தினம் வசீகரன் (நவாலி), ராஜலிங்கம் கார்த்திகேயன்(மல்லாகம் தெற்கு),சீவரத்தினம் சிவநேசன்(பஞ்சு தோட்டம்), சிவப்பிரகாசம் ரஜனிகாந் (புலோலி தெற்கு),கணபதிப்பிள்ளை முருநதன் (அல்வாய்),பொன்னுத்துரை காண்டீபன் (புத்தூர்), வேலுப்பிள்ளை திருக்குமரன் (பருத்தித்துறை),யோகதாஸ் அசோக்காந் (அல்வாய்),சுஜாதா சாமிநாதர் (பருத்தித்துறை),சுபாஜினி சுந்தரேஸ்வரன் (அளவெட்டி மேற்கு),அருட்சகோதரி மேரி அந்தோனிற்றா (கரவெட்டி),அருட்சகோதரி மேரி டிலக்ஸி (கரவெட்டி),வேணுசா அருணகிரிநாதன் (கொக்குவில் கிழக்கு).

அச்சுதன் சந்திரமலர் (வதிரி),சுகந்தி சத்தியானந்தன் (சாவகச்சேரி),முத்துக்குமாரு பிரதீபா (சாவகச்சேரி),கிரிஜா ஞானசேகரம் (கல்வயல்),சோபனா குகதாசன் (பண்ணாகம் தெற்கு),சரவணமுத்து பரமேசன் (திரு நெல்வேலி),யமீலா துரைச்சாமி (யாழ்ப்பாணம்), கஜபாலினி இராசையா (நீர்வேலி), சைலஜா சிவராஜன் (சாவகச்சேரி),திருஞான சம்பந்தர் ஞானேஸ்வரன் (ஏழாலை).

கனகலிங்கம் நந்தகுமார் (மூத்ததம்பி வீதி),மனோகரி கேதீஸ்வரநாதன் (பழம் றோட் கந்தர்மடம்), கோமதி செல்வநாதன் (கலைமகள் வீதி), சர்வேஸ்வரன் பத்மா(பண்டத்தரிப்பு), சிவநந்தினி சிவநாதன் (மானிப்பாய்), சுவர்ணா கந்தசாமி(கைதடி),துஷ்யந்தி விஜயகுமார் (கொக்குவில்),கோசலை அரியரத்தினம் (யாழ்ப்பாணம்),சுனிதா செல்வரத்தினம் (கொக்குவில்),சுனித்திரா சிறிதரமோகன் (யாழ்ப்பாணம்),பற்றீசியா ஞானச்சந்திரன் (இணுவில்),பத்மபிரியா ரூபன் (ஆனைக்கோட்டை),நாகநாதன் காயத்திரி (கொடிகாமம்).

மதுராம்பிகை சிவானந்தம் (கரணவாய் மேற்கு),நற்குணம் அகிலன் (யாழ்ப்பாணம்), சிறிகாந்தராஜா சுஜிதா (திருநெல்வேலி), தணிகாசலம் கலாவித்தியா (கொக்குவில்), பாலசுப்பிரமணியம் சசிக்குமார் (நீர்வேலி), மதனசுரேந்திரன் சுரேகா (கொக்குவில் கிழக்கு), அனுசியா பத்மநாதன் (சுன்னாகம்), சிந்துஷா மகேஸ்வரன்(வல்வெட்டி), சிவப்பிரகாசம் லோகதர்சினி (நல்லூர்),அரியகிருஸ்ணன் பிரஸ்ணன் (அரியாலை),தர்ஷினி ஜெயரட்ணம் (ஆனைக்கோட்டை),அற்புதம் வினோராஜ் (சண்டிலிப்பாய்),வளர்மதி யோகராஜா (நாவற்குழி தெற்கு),நிசாந்தினி இராஜகுலநாயகம் (கைதடி),கவிதா சிவஞானசுந்தரம் (நீர்வேலி),திருஞானந்தம் ஜெயரூபன் (காரைநகர்கிழக்கு),கனகசிங்கம்லக்சுமிகாந்(பலாலி வீதி).

குணசீலன் சாள்சன் (நவாலி தெற்கு), ஸ்ரீபாலச்சந்திரன் தாரணி (நல்லூர்),சின்னத்துரை சுதாநதி(கோப்பாய் தெற்கு),முத்துக்கிருஸ்ணன் நிஷாலினி (சங்கத்தானை),கந்தசாமி ஜெயநீதன் (வடகிழக்கு),மரியநாயகம் கிறிஸ்ரியன் அனுசாந் (மானிப்பாய்),சிவயோகநாதன் சுதர்சினி (நீர்வேலி),இரட்ணசிங்கம் மகேஸ்வரன் (ஆனைப்பந்தி),செல்வநா யகம் ரஞ்சித்குமார் (கோண்டாவில்), ஹரிலதா பரமநாதன்(அரியாலை).

ஜான்சி சிதம்பரநாதன் (துன்னாலை தெற்கு),சிவதர்சினி சின்னத்தம்பி (மல்லாகம்),தாமோதரம் பிள்ளை சுகந்தன் (தாவடி), சிவபாதராஜா ராஜீவ் (அல்வாய்),யசோதா சுப்பிரமணியம் (மாதகல்),சிவஜோதி இராஜரத்தினம் (சண்டிலிப்பாய்),சாமில்டா கதரின் றோசா (கரவெட்டி),ரசிதா சுதாகரன் (விக்னேஸ்வரா வீதி), கேமறஜி நமசிவாயம் (அச்செழு), தர்சினி செல்வராஜா (ஊரெழு மேற்கு), சின்னராசா கலாசினி (வாதரவத்தை).

சிதம்பரப்பிள்ளை லலீஸ்வரி (நீர்வேலி மேற்கு),செல்லக்கண்டு சுகன்யா (அச்சுவேலி தெற்கு),செல்வலட்சுமி புவனேந்திரராசா (உரும்பிராய் வடக்கு),துரைரத்தினம் தெய்வமலர் (இடைக்காடு),சதீஸ்கரன் சுஜித்தா (தும்பாலை),லாவண்யா ஸ்ரீசந்திரன் (சங்கணாவத்தை வீதி),கந்தையா ஜெயகாந்தா (அச்சுவேலி வடக்கு).

மகாதேவன் வினோகாந்தன்(1ஆம் ஒழுங்கை கோப்பாய்),விமலேஸ்வரி கதிர்காமநாதன்(சிறுப்பிட்டி வடக்கு),நடராசா சிவகாமசுந்தரி (26/4அராலி),மன்மதராஜா யாழினி (210 கஸ்தூரியார் வீதி),லிந்துஜா நிமல்குமார் (31/1 சிவப்பிரகாசம் வீதி),வதனா சுப்பிரமணியம் (22 இரத்தினவாசா), செல்வமாணிக்கம் சுபாசினி(23/1 புருடி லேன்),வாமதேவன் ஜெனிற்றா (புலவர் வீதி),கோகிலா சக்திவேல் (நாவற்கட்டை லேன்),ஆரோக்கியராசா ஜெயசீலி(63/3 கொண்டலடி லேன்), அப்புத்துரை விஜயலட்சுமி (புத்தூர் கிழக்கு),சுகிர்தா சிவயோகன் (புத்தூர் கிழக்கு),மதிவதனி நடனசபை (சிவன் கோவிலடி),கைமாறட்சன் ஆன்றுக்சி (82 பழைய பூங்கா வீதி, அருட்ச கோதரி மேரி டிலக்சி (லங்கா மாதா மடம்), சிவராசா சிவரூபன்(உரும்பிராய் தெற்கு), சுப்பிரமணியம் ஜெயந்தன் (நெட்டிலிப்பாய்), ரவீந்திரா தவரூபி (வட்டு தெற்கு), சுப்பிரமணியம் கோகுலன் (107 கோவில் வீதி.

மகேந்திரன் கலைமகள் (மஞ்சவனப்பதி வீதி), கங்கா ஜெகதீஸ்வரன் (கருவேலடி வீதி), அன்ரனிற்றா ஜெயக்குமாரி(50 செட்டி சீமா லேன்),யூட்டினா சுபாசினி (பருத்தித்துறை), சகாயமேரி விசுவாசம் (றீற்றம்மா கோவிலடி), நற்குணசிங்கம் பிரவீனா (அச்சுவேலி வடக்கு),குமாரசாமி துவாரகைமலர் (அச்சுவேலி தெற்கு),ஸ்ரீகாந்தா பிரசாந்தி (156 பாற்பண்ணை வீதி),ருமினி றெஜிமோகநாதஸ்(17 சென்மேரிஸ் வீதி),சசிக்குமார் விஜித்திரா(10ஆம் கட்டை),அனிதா கருணாகரன்(454 நாவலர் வீதி),மரீனா சியாமினி (42 ஈச்சமோட்டை வீதி, ஜெனிதா மெனஸ்ஸஸ் (16 ஜஸ்பிளாண்ற்).

அலோசியஸ் தர்சினி (26/1 ஆசிர்வாதப்பர் வீதி),மார்ரெலன்ஸ் றொசிரா (66, 6ஆம் குறுக்குத்தெரு),தனசிலி மரியநாயகம்(57 மத்தியூஸ் வீதி),சின்னப்பு இந்திரராசா (பழைய வீதி),மேரி ரோசா ஹெரால்(7/8 4ஆம் குறுக்குத் தெரு),கிரிதரன் உஷாநந்தி (பிரதான வீதி),ரோகினி வீரசிங்கம் (அரசடி வீதி),கந்தசாமி துற்ஜெயந்தன்(கேணியடி ஒழுங்கை),தேவகி யோகேந்திரன்(நீர்வேலி மேற்கு),பத்மநிதி பரஞ்சோதி (திருநெல்வேலி), அபரஞ்சினி சிவகணநாதன்(இணுவில் மேற்கு), சின்னராஜா பிரதீபா (நல்லூர் வடக்கு), சிவராஜா சிவகாந்தன்(கோகிலா வீதி).

கந்தையா மயில்வாகனம் (அளவெட்டி), பாலகௌரி சகாயநேசன் (சூழானை), தவராணி (பன்னாலை),சாந்தினி சுரேஸ்கரன் (சுன்னாகம் கிழக்கு),பாலசுந்தரம் பிரகாஸ் (ஏழாலை), செந்தில்நாதன் சபேசன்(அளவெட்டி மேற்கு), புனிதநாயகி(அளவெட்டி தெற்கு),கவிதா சந்திரமோகன் (ஆனைக்கோட்டை),இராசா கிருஸ்ணசேகரன்(அளவெட்டி),தர்ஜினி தில்லைநாதன் (ஏழாலை மேற்கு),சாரதா தேவி ராதாகிருஸ்ணன் (காளிகோவிலடி), நந்தினி இடாரூடன்(அளவெட்டி தெற்கு), சிவராசா நாகதீபன்(பங்களா லேன்),மேரி இமெல்டா அல்மினஸ்(44 கோவில் வீதி ஒழுங்கை), அனற்பிறிம்றோஸ் சதீஸ்குமார் (குளமங்கால்),பிரணவசோபினி ரவிசங்கர் (மகாதனை துர்க்கா புரம்),பரராசசிங்கம் ஸ்ரீசங்கர் (ஞானப்பிரகாஸம் வீதி.

கலைமதி ஈஸ்வரானந்தம் (அராலி மத்தி), மரியஸ்ரெலா(நவாலி தெற்கு), சங்கரப்பிள்ளை யஷோதரன்(சுழிபுரம் கிழக்கு),ரவுரி மார்க்கண்டு (தெல்லிப்பழை),தேமொழி குகதாஸ்(நெல்லோடை),கவிதா நடராசா (ஏழாலை மேற்கு),யசோத்தா ரஜீனந்தா (வேலவளவு),துறாஜினி துரைராசா (வட்டப்புலம்),அமித்தா ஜெயசீலன்(ஆர்க் வீதி), ஜேசுதாசன் ஜெயசித்திரா(உடுவில் தெற்கு), மரியசந்தனா றீகன்(இளவாலை மேற்கு), கவிதா பரமேஸ்வரி(இளவாலை),இராசையா தாட்சாஜினி(கற்பகப்பிள்ளையார் கோவிலடி), றெனோ அன்ரனிசியா(பாற்றிமா வீதி), இராசையா ஷசிகுமார்(முருகமூர்த்தி கோவில் வீதி),ஜேசுதாசன் அனுஸ்டதாஸ்(பிரதான வீதி),இளையதம்பி ரமணன்(காவிளி கோவிலடி சண்டிலிப்பாய் மத்தி),கலைவாணி சிவானந்தன்(வீரபத்திரர் கோவிலடி), காசினிதேவி நடராசா(வங்கியடி, இன்னாசி முத்து அன்ரன் (பற்றிமா வீதி),ஏகாம்பரசா சிறிரங்கன்(மனை ஒழுங்கை), கார்த்திகேசு சிவரஞ்சன் (சிவகுரு வீதி),கௌசலா திருவ ருள்நாதன் (வட்டு வடக்கு), மகேஸ்வரி நடன சிங்காரவேல் (மூத்தவினாயகர் கோவிலடி),தில்லைநாதன் நடனசபை(சிவன் கோவிலடி),வாசுகி தவச்செல்வம்(சண்டிலிப்பாய் வீதி),சிறிரஞ்சனி (திருவருளகம்),கலாவதனி ரமேஸ் (சென்ற் ஜேம்ஸ்),றெயினா பீற்றர்(நவாலி கிழக்கு), நிருஜா கந்தசாமி(மயிலங்காடு).

லதாஜினி அமிர்தலிங்கம்(சண்டிலிப்பாய் மேற்கு),டொறின் ஜெயதிபா ஒலிவர்(ஊஆ அருகாமை),சசிகுமார் சின்னத்தம்பி(சுழிபுரம் மத்தி),பவானி ஆனந்தகிருஷ்ணகுமார் (மூளாய் தெற்கு),விஜயராணி வரதீஸ்வரன் (கலையரசி வீதி நவாலி தெற்கு),சாந்தி விநாயகமூர்த்தி(வட்டு வடக்கு),நிர்மலா ஞானானந்தன் (அரசடி ஒழுங்கை),பிரியா குமாரசாமி (ஏழாலை வடக்கு),அஜந்தா அப்புத்துரை (வட்டு வடக்கு),கொன்சீலியா செல்வரத்தினம் (புனித செபஸ்தியன் வீதி),சின்னத்துரை கிருஷ்ணசாந்தி (அலுக்கை),தீபா சந்திரபவன் (மூளாய் தெற்கு),ஜோசப் றோஷானி (அலுக்கை),தர்ஷினி சிவராசா (நிற்சாமம்), பொன்னுத்துரை ஜெகநேசன் (குளமங் குளம்), கௌசலா சிவலிங்கம்(பாடசாலை வீதி,சுகந் தினி கமலதாஸ்(அளவெட்டி மத்தி),சிவகுமார் திருமாவளவன்(லீலா பேக்கரி லேன்), பரிமளா சிவசுப்பிரமணியம்(அராலி தெற்கு),ஜோசெவ்கதரின் (அரசடி வீதி).

பிரியதரிசினி சிவசுப்பிரமணியம்(யு டீ ஊ இ ஒழுங்கை),தாமரைச்செல்வி பாலன் (வேரவில்லா),தம்பிநாயகம் நாகநாதன் (சித்திரமேளி),ஜெயபானு சுரேந்திரநாத் (சோடாக் கம்பனி லேன்),தாட்சாயினி வேலுப்பிள்ளை (காளி கோவிலடி),யு ட்நிரஞ்சன் (சென்ற் ஜேம்ஸ் வீதி.

முரளிதரன் சகாயமேரி(சகாய மாதா கோவில்),து.கலைச்செல்வி (கல்லூரி வீதி,ந.சிறிதரன்(விறுமர் கோவிலடி),சிந்துஜா ஸ்ரீகோபாலன் (சீனாப் புலம் கரணவாய் வடக்கு), இராஜினி ரஜனிகாந்(அம்பன்),ரதிதேவி கணபதிப்பிள்ளை (அம்பன்),த.கலாநிதி (அம்பன்), ஆ. தேவகுமார் (தும்பளை தெற்கு), வேதநாயகம் டெனிஸ் மேரி(தும்பளை தெற்கு), சாந்தினி பேரம்பலம்(தேத்தாவடலி),ஜெயரதி அருட்செல்வம்(துவாளி வீதி),தயானி தவராசா (பாரதி வீதி),சோபனா தூயவன் (கற்கோவளம்),சிவானந்தராஜாகுருக்கள் ரூபா (வியாபாரிமூலை),செல்வநாயகம் சுபா (பந்தியவத்தை),நளாயினி அரவிந்தன்(கல்லடி ஒழுங்கை),ப.தயாளதாஷன் (உடுப்பிட்டி வீதி),விஜி லிங்கேஸ்வரன் (கந்தன் இல்லம்),த. வித்தியானந்தன் (மாயக்கை).

செல்வநாதன் பிரதீபா (ஒதியடி பொலிகண்டி),அனுராதா ஜெகநாதன் (அண்ணா சிலையடி),ராஜ்மனோகரன் கமலினி(குச்சம் ஒழுங்கை),தயாநிதி சசிகரன் (அவ்வொல்லை வீதி), ஸ்ரீவித்தியா சிறியானந்தம் (அரசடி ஒழுங்கை),நிருபா தங்கவேலு (மணல் வளவு), ஜயந்தி தர்மகுலசிங்கம் (பாலாவித் தெரு), கீதாஞ்சலி மகாதேவன்(சன்னதி கோவிலடி), த.சுபாஸ் (பொன்மலர் வீதி), அனுஜா முருகேசுப்பிள்ளை(ஆயிலடி),ஸ்ரீகௌரி சிவலிங்கம் (உந்தோடை), துரைராஜா காயத்திரி (வல்லாவத்தை),பிரேமினி அழகையா(அரசடி ஒழுங்கை),ராஜேஸ்வரி பழனித்துரை(வீரகத்திப் பிள்ளையார் கோவிலடி),விஜியேந்தி சித்திநாதன் (மலை யாளம் தோட்டம்),சுதன் ஞானரூபா (கற்கோ வளம்),ரகுபதி கவிப்பிரியா (ஸ்ரீ இல்லம் இமையாணன் கிழக்கு),ப.சுதேஸ் (15ஆம் கட்டை தெற்கு), பொன்னையா சகுந்தலா(யாக்கரு கரவெட்டி கிழக்கு), நவநீதராணி சிவகுமார்(குஞ்சுகளசிட்டி புற்றளை), க. குகதாஸ்(நீண்டியம்பற்றை), ந. நிரஞ்சன் (பண்டாரத்தறை), ஸ்ரீதரன் நித்தியா (குமாரவளவு), செல்வசபாபதிப்பிள்ளை (நெடியகாடு), இரத்தினம் குமுதா (முருகையன் கோவிலடி).

சிறிதரன் உஷா(புலோலி தெற்கு), அனுஷியா மகேந்திரன் (குரம்பகட்டி), ஜெயந்தி தங்கராசா(வெள்ளுருவை), க. வாசுதேவன்(கௌரி கோட்டம்),சி.சிவதாஸ் (அல்வாய் கிழக்கு),த. ரதீஸ்வரன் (பிறவளவு இமையாணன் கிழக்கு), யே.தவக்குமார்(பலாலி தெற்கு), நர்மதா நடராசா (நாகநாதன் வீதி),கு.ஜெயந் தன் (குடத்தனை கிழக்கு), க.ஸ்ரீதரன் (ரஜனி மஹால்), பா.கிருஷ்ண ரூபன்(குரம்பகட்டி), ச. ராஜ்குமார் (கலட்டி), நிர்மலராணி தேவராஜா (லிங்கா வாசா),ப.சசிவண்ணன் (செல்வ ஜோதி), சத்தியேந்திரா பாரதி (ஊரி, ஊரணி), சிவரூபி சிவராசா(சாவகச்சேரி),சிவமலர் மகேஸ்வரன் (சரசாலை வடக்கு),ச.குமரதாஸ் (நுணாவில் மேற்கு), ஜெயந்தி நாதன் லோகேஸ்வரி(கைதடி கிழக்கு),சரஸ்வதி சுதர்சன் (கைதடி வடக்கு).

ச.ஏகாட்சரம்(கெற்பேலி மேற்கு),கணேசலிங்கம் பவானந்தி(அல்லாரை தெற்கு), த.மஞ்சூரன்(மீசாலை கிழக்கு),த.ஜெயகரன் (மாசேரி), சிவயோகம் ராசவிநாயகம் (வெள்ளம்போக்கட்டி), துளசிமலர் வயித்தி (கச்சாய் வீதி),பாலசுந்தரக்குருக்கள் (மீசாலை கிழக்கு), மரியசுவர்ணா இம்மானுவேல்(கேரவில்), புஸ்பரஞ்சினி ஹம்சன் (நெடுங்காடு),தனுஜா தேவராசா (பலகாடு), வி.பாலகுமார்(1ஆம் வட்டாரம்), சோமசுந்தரம் ரேணுகா (கருங்காலி), ஜெயராஜ் டல்சி(10ஆம் வட்டாரம்), சிவநாதன் யாழினி(192 பிறவுண் வீதி), உஷாந்தினி யோககுமார்(2ஆம் வட்டாரம்), துதிகரன் வசந்தி(5ஆம் வட்டாரம்),துளசிமலர் இரவிசங்கர் (8ஆம் வட்டாரம்),ந.நர்த்தனன்(6ஆம் வட்டாரம்),சுபாகரன் சுபாஜினி (5ஆம் வட்டாரம்),கந்தையா துர்க்காபரா (5ஆம் வட்டாரம்).

பொனாவெந்தூஸ் டேனிற்றா (பிள்ளையார் கோவிலடி),சுதாகர் ரேணுகா (2ஆம் வட்டாரம்),சந்தியாம்பிள்ளை மேரி(5ஆம் வட்டாரம்),அன்ரனி ஆன் டயானா(3ஆம் வட்டாரம்),அருள்நாயகம்(மத்திய கிழக்கு), அசோக்குமார் ஜெயசித்திரா(2ஆம் வட்டாரம்), புஸ்பராணி சயந்தன்(5ஆம் வட்டாரம்), மரிய புஸ்பமலர் ஞானப்பிரகாசம் (நெடுந்தீவு மத்தி),மேரி மக்டலின்(6ஆம் வட்டாரம்), அருள்ராஜினி சந்திரகுமார்(11ஆம் வட்டாரம்), ஜெயமலர் தோமஸ் அல்வின்(6ஆம் வட்டாரம்), நளாயினி ரமணன்(1ஆம் வட்டாரம்),அகுஸ்தியஸ்ரீன்(சரவணை மேற்கு), இ.சுதாகரன் (வேலணை வடக்கு), பெரியதம்பி சிவதர்சினி (நாரந்தனை வட மேற்கு), தர்மிளா சந்திரசேகரம் (7ஆம் வட்டாரம்),டிசாந்தி அன்ரனி (கரம்பன் கிழக்கு).ஜோச் ரஜீதா (உப்புக்குளம் வீதி),டலிதா தருமலிங்கம்(5ஆம் வட்டாரம்), சங்கீதா நாகரா சா(நாரந்தனை வடக்கு), பத்மினி கோபால சிங்கம்(நாரந்தனை வடக்கு), நாகேந்திரன் மனோகரராணி (4ஆம் வட்டாரம்),பிறேமலா அருள்நேசதாசன் (ஊர்காவற்றுறை), விஸ்வன் சுதர்சினி (12ஆம் வட்டாரம்), ஆசிர் தேவதாஸ் டேவிற்ரென் (6ஆம் வட்டாரம்), டிகால் பாக்கியநாதன் (6ஆம் வட்டாரம்), தோமஸ் அன்றன் றொஷானி (10ஆம் வட்டா ரம்),பிலிப்பு மார்சலின்ஸண்(40யு குருநகர் யாழ்ப்பாணம்), யாழினி செல்வேந்திரன் (வேலணை வடக்கு), சிவபூஷணி சிவபாதசுந் தரம் (வேலணை மேற்கு),உமாதேவி ஞானசம்பந் தன் (புளியங்குளம் தெற்கு),உமாதேவி ஆறு முகம் (கொட்டைப்புலம்),கணபதிப்பிள்ளை (சுடையாரி), மகாலிங்கம் பிறேமலதா(சரவணை கிழக்கு), காந்தலோஜினி ரமணன் (நயினாதீவு). (ச)

# இன்று ஒரு தகவல்

## நமக்குள்ளே ஒரு புதையல்

அது ஒரு பெரிய சந்தை. அதற்கருகில் ஒரு பிச்சைக்காரன் நின்று பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். நீண்ட காலமாகவே அவன் அந்த இடத்தில் நின்று தான் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

இருப்பினும் "எனக்குப் பிச்சை போடுங்கள்" என்று அவன் ஒரு நாளும் கேட்டதில்லை. வலது கையை மட்டும் ஏந்திக் கொண்டிருப்பான்.

அந்த வழியால் வருபவர்கள், போகிறவர்கள் தாங்களாக முன் வந்து ஏதாவது காசு போட்டுவிட்டுப் போவார்கள்.

திடீரென ஒருநாள் அவன் அவ்விடத்திலேயே இறந்து போனான்.

ஊர் மக்கள் பார்த்தார்கள் "யாரையும் தொந்தரவு செய்யாதவன் இப்படி அநாதையாக விழுந்து இறந்து போய்விட்டானே" என்று பரிதாபப்பட்டனர்.

ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சுவடி அந்தப்பிச்சைக்காரனுக்கு ஒரு சிலை எழுப்பத் தீர்மானித்தார்கள்.

உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தனர். பலர் முன் வந்து நிதியுதவி அளித்தார்கள். அப்படி நிறையப் பணம் சேர்ந்து விட்டது.

அவன் நின்று கொண்டிருக்கும் இடத்திலேயே அத்திவாரம் தோண்ட ஆரம்பித்தார்கள்.

இரண்டு அடி ஆழம் தான் தோண்டியிருப்பார்கள். திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது.

அவசர அவசரமாக அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தார்கள். ஒரு பெரிய செப்புக்குடம் தெரிந்தது. அதை வெளியே எடுத்து அதில் என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள்.

அதில் ஏராளமான தங்க நாணயங்கள் இருந்தன. அதைப் பார்த்ததும் கூட்டத்திலிருந்தவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

அப்போது கூட்டத்திலிருந்த ஒருவர் பார்த்தீர்களா? இந்தப் பிச்சைக்காரன் தன் காலுக்கு அடியிலேயே புதையல் இருக்கிறது என்பது தெரியாததால் வருபவர்கள் போகிறவர்கள் என்று எல்லோரிடமும் காசுக்கு கையேந்தி நின்றே இறந்து போனான் என்றார்.

அந்த வழியாக வந்த துறவியொருவர் ஆமாம் ஒவ்வொரு மனிதனும் கூட இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். தன் மனதில் குவிந்திருக்கும் திறமையையும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தெய்வத்தையும் அவன் புரிந்து கொள்வதில்லை. அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக் கொண்டு அதைத் தேடியவாறே மக்கள் காலம் முழுவதையும் கழித்து விடுகிறார்கள் என்று சொல்லி விட்டு அந்தத் துறவி அங்கிருந்து சென்றார்.

கூட்டத்திலிருந்தவர்கள் அதன் பின் தான் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

நம்மிடம் என்னென்ன இருக்கிறது என்பதை நாம் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம். ஆனால் அதையெல்லாம் தேடி வெளியே அலைந்து கொண்டிருக்கிறோம். என்பதே இந்தக் கதையின் கருத்து.

ஜீனாய்ட் என்ற ஞானி இருந்தார். அவரிடம் ஒரு சீடன் வந்து உங்களிடம் ஞானம் என்ற முத்து இருப்பதாகச் சொல்கிறார்களே! எனக்கு அதில் கொஞ்சம் தேவை.

ஒன்று அதை என்னிடம் விற்று விடுங்கள். இல்லாவிட்டால் இனாமாகக் கொடுங்கள் என்று கேட்டான்.

அதற்கு அந்த ஞானி உனக்கு நான் அதை விற்பதற்கில்லை. ஏனென்றால் அதன் விலையை உன்னால் கொடுக்க முடியாது. சரி இனாமாகக் கொடுக்கலாம் என்றால்... இனாமாகக் கொடுப்பதை நீ மதிக்க மாட்டாய். ஆதலால் என்னைப் போல் நீயும் கடவுள் என்ற சமுத்திரத்தில் மூழ்கி எழுந்திரு. அப்போது நீயும் ஒரு முத்து எடுத்துக் கொண்டு வரலாம் என்று பதிலளித்தார்.

இதெல்லாம் வெளியில் வாங்கும் பொருளல்ல. உள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கும் முழுமையான முயற்சி இருக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

ஆசிரியர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவு வழங்குவதற்காக

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தலா ரூபா 5 மில். அனுப்பி வைப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் பணிப்புரைக்கமைய மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் கணக்காளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனைகளின் பிரகாரம் ஆசிரியர்களின் செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களுக்கான நிலுவைக் கொடுப்பனவை வழங்குவதற்காக 400 மில்லியன் ரூபா மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படாத ஆசிரியர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுக்கான நிதி இம்மாதம் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஏற்கனவே நிலுவைக் கொடுப்பனவு வழங்குவதற்காக மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிதியில் மேல், மத்திய, தென் மாகாணங்களுக்கு தலா 90 மில்லியனும், வடமேல், சப்ரகமுவ மாகாணங்களுக்கு தலா ரூபா 40 மில்லியனும், ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கு தலா ரூபா 20 மில்லியனும் அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு தலா ரூபா 5 மில்லியனும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சு கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து நடாத்திய சிறந்த தொழில் முயற்சியாளர்கள் தெரிவில் 2008 ஆம் ஆண்டில் அகில இலங்கையில் மாகாண மட்டத் தெரிவில் 1 ஆம் இடத்தைப் பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனகலா நிலையம் பத்தரமுல்லவில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் குறிப்பிட்ட துறையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ்களும் 10 ஆயிரம் ரூபா பணப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி விருதுக்காக யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு,

சோமசேகரன் குகனானந்தா ''மைக்றோ பி.சி. ரிஸ்ரம்'' (17/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), கனகசபை பூரணச் சந்திரன் "ஸ்ரார் இன்டஸ்ரியர் சேவிஸ்'' (15/1, பிள்ளையார் கோவில் நாயன்மார்கட்டு நல்லூர்), சுப்பர் பொன்னையா நடராசா ''அண்ணா தொழிலகம்'' (துரைவீதி, இணுவில்), சிவராசா சந்திரமேனன் ''ஜனா தொழிலகம்'' (செல்லையா வீதி மனோக்ரா அல்வாய்).

தோமஸ் கிறிஸ்ரின் செல்வராஜன் ''நியூட்டா இன்ட்ஸ்ரி'' (120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), சின்னப்பன் குருநாதன் ''ஒமேகா மல்ரி புரடக்ஸ் இன்டஸ்ரி'' (அறுகம்பற்று அளவெட்டி தெற்கு அளவெட்டி), ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் ''ஆறுமுகம் சிற்பாலயம்'' (காளி கோவிலடி திருநெல்வேலி மேற்கு), சிவஞானசுந்தரம் ராஜ்குமார் ''கரிகணன் பிறிண்டஸ்'' (424, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்).

சுப்பிரமணியம் பாஸ்கரன் ஆச்சாரி ''பாஸ்கரன் சிற்பாலயம்'' (479 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), சின்னத்துரை யசோதரன் ''யசோ ஆட்ஸ்'' (212 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்), ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் ''ஜனா கட்டிடப் பொருள்'' (கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை), வாமதேவன் சோமேஸ்வரி ''சிற்பி கணன்ஸ் நாமென்ஸ்'' (கோவில் வாசல் கே.கே. எஸ் வீதி, இணுவில்), வேலுப் பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா "EUTLTD" (சுன்னா கம் கிழக்கு சுன்னாகம்), யோகப் யோகராசா (103/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம்). (ஓ-7-14)

## இராசி பலன்

14.11.2009
(ஐப்பசி 28 சனிக்கிழமை)
திரயோதசி பின்னிரவு 2.06 மணிவரை
அத்தம் காலை 6.30 மணிவரை
இராகுகாலம் 9.07-10.37 மணிவரை
சுபநேரம் 3.07-4.37 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | சுகவாழ்வு, சத்துருஜெயம், திடீர் பயணம், காரிய நன்மை. |
| இடபம் | குடும்பக் கவலை, தனவிரயம், பிரயாணத் தடங்கல், தொழில் நன்மை. |
| மிதுனம் | கல்வியில் ஆர்வம், நல்ல செய்தி, வேலைச்சுமை, வீண் பயம். |
| கடகம் | அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, பிரயான நன்மை, சுபநிகழ்வு. |
| சிங்கம் | வீண் பகை, தொழில் நன்மை, தனவிரயம், முயற்சி தாமதம். |
| கன்னி | ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், உறவினர் வருகை, போசன சுகம். |
| துலாம் | உணர்ச்சி வசப்படல், தந்தை வழி உறவு, தனவிரயம், பிரயாணம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், விருந்து பசாரம். |
| தனுசு | சுப நிகழ்வு, கடின உழைப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மகரம் | உடல் உழைப்பு, உடல் நலக் குறைவு, நிலை மாற்றம், வீண் பயம். |
| கும்பம் | அச்சமான நிலை, மனச்சஞ்சலம், காரிய தாமதம், தனவிரயம். |
| மீனம் | அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, கலந்துரையாடல், தனவருவாய். |

வளவன்



## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் 12 மணிவரை கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலனை, ஊர்காவற்றுறை, அராலி, மானிப்பாய், கட்டுடை, சங்குவேலி உடுவில், மருதனார்மடம், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என சுன்னாகம் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா, | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 75 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 30 | 50 | 45 |
| கரட் | 70 | 80 | 75 |
| பூசணி | 10 | 25 | 30 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 30 | 60 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 90 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 200 | 240 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

பருத்தித்துறை பிரதேச சபையின் மத்திய நூல் நிலையத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடதப்பட்ட விழாவில் இளைப்பாறிய கடற்றொழில் பரிசோதகர் என்.கணபதிப்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேசசபை பிரதம லிகிதர் பி.பூபாலசிங்கம் நிற்பதையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட புற்றளை மகா வித்தியாலயம், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இளவாலை கிராமத்தில் சுகாதார திணைக்களத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட புதிய காணியில் வடமாகாண சுகாதார அமைச்சின் PSDG நிதி மூலம் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவுக் கட்டடம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண அமைச்சு செயலாளர் இ. இரவீந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி த. பேரானந்தராஜா , தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க. இராதையன், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தி. ஜெயகுமாரன், யாழ் கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசன், தெல்லிப்பழை பிரதேச செய லாளர் சு.முரளிதரன் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் ம.ஜெகூ ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-9)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான பிறப்பு,இறப்பு பதிவு நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து முகாம்களிலிருந்து யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு ,வவுனியாவைச் சேர்ந்த மக்கள் பிறப்பு , இறப்பு பதிவுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரும் அதற்குப் பின்பும் பிறப்பு இறப்பு விபரங்கள் பதியப்பாடாத இடம்பெயர்ந்த மக்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் ஏற்கனவே பதிவு மேற்கொண்டவர்கள் பதிவு தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பின் அதற்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-7-14)

## இலவச நீரிழிவு மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் கோவிற்பற்று, உரும்பிராய் லயன்ஸ் கழகங்கள் நடத்தும் இலவச நீரிழிவு மருத்துவமுகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் கலந்துகொண்டு சலம் மற்றும் இரத்தத்தினை பரிசோதித்து பயன் பெறலாமென்றும் பரிசோதிக்கவுள்ள பொது மக்கள் காலை உணவு மற்றும் தேநீர் எடுக்காமல் பரிசோதனைக்கு வருமாறும் மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.இராஜசூரி கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4)

## மேசன் பயிற்சிநெறி

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையும் கொல்சிம் லங்கா லிமிடெட்டும் இணைந்து மேசன் பயிற்சிநெறியொன்றை நடத்தவுள்ளனர். இப்பயிற்சி நெறியில்பங்குபற்ற விரும்புவோர் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 7 கோவில் வீதியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை (NAITA) காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது. இதில் இடம் பெயர்ந்தோருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-9)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும்

(இருபாலை)

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும் இன்று சனிக்கிழமை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆ.இரகுபதி கலந்து சிறப்பிப்பதுடன் வாழ்த்துரையை உடுவில், கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், நினைவுப் பேருரையை ஆசிரிய ஆலோசகர் சி. இராஜவரோதயம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-4-136)

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள்

**மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்**
சீ.விதுஷா-155, சி. கஜானன்-152,ஆ.சர்மிலன்-151,ம. மானுஷா-141

**மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**
ம. திவ்வியா-148

**மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்**
ம. ஜங்கரன்-143

**கல்வயல் சிறீசண்முகானந்த வித்தியாலயம்**
க. அச்சுதன்-160,சு. நிவேதனா-148

**நல்லூர் சிறீ விக்னேஸ்வராவித்தியாலயம்**
ஆர். யூடினி-149,என். டலக்ஷியா-139

**மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்**
சி. டதுர்ஜியா-151 (ஓ)




## பணி நயப்பும் நூல்கள் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ச. நா தணிகாசலம் பிள்ளையின் பணிநயப்பும், நூல்கள் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முன்னாள் அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து , வாழ்த்துரைகள், பாராட்டுரைகள் என்பன இடம்பெறவுள்ளன . தொடர்ந்து தணிகை பணிநயப்பு மலர் வெளியிடும் நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிகங்கராசாவும் நயப்புரையை யாழ். பல்கலைக்கழ கல்வித் துறை பேராசிரியர் மா. சின்னத்தம்பியும் வழங்கவுள்ளனர். அடுத்து கல்வியுலா நூல் வெளியீட்டில் வெளியீட்டுரையை வவுனியா வளாக ஆங்கிலத்துறைத் தலைவர் க. ஸ்ரீகணேசனும் நயப்புரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி ஆசிரியர் பா. மகாலிங்கமும் வழங்கவுள்ளதுடன் நூல்கள் வெளியீட்டு அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்புலவிரிவுரையாளர் த. கலாமணி மற்றும் யாழ். கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி . பா. தனபாலன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-9)

## குறிகட்டுவான் - நயினாதீவு படகு சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கம் நாட்டில் ஏற்பட்டுள்ள சாதாரண சூழ்நிலையால் மக்கள் போக்குவரத்து அதிகரித்துள்ளமையைக் கருத்தில் கொண்டு தமது சேவையை விஸ்தரித்துள்ளது. இதன் பிரகாரம் எதிர்வரும்16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தினமும் நயினாதீவில் இருந்து குறிகட்டுவானிற்கு காலை 6.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை மணித்தியாலத்திற்கு ஒரு படகு சேவையும் குறிகட்டுவானில்இருந்து நயினாதீவிற்கு காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை ஒரு படகு சேவையையும் நடத்த முன்வந்துள்ளதாக நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஓ-9)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபையினரால் வெளியிடப்படும். *கந்தன் கதையின் அசுரகாண்டத்து மாயைப்படலம்* உரையுடன் கூடியது என்னும்நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்உரையை இ. ஞானசுந்தரம் எழுதியுள்ளார். (ஓ-4)


## ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஸ்ரீ அம்மா பகவான் சீடர் ராஜேஸ் தாதாஜி அவர்களால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவிருந்த ஆன்மீக நிகழ்ச்சி மற்றும் இலங்கையில் நடத்தப்படவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஸ்ரீகல்கி ஆன்மீக மையம்
மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(C/3706)


## ஒன்றிணைந்து எமது சூழலைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததிக்கு பசுமையான சூழலை வழங்கி செல்வோம்

சூழல் பாதுகாப்பு என்பது இன்று உலகளாவிய ரீதியில் பரவலாகப் பேசப்பட்டு வரும் பாரிய பிரச்சினையாகும். எனவே சூழல் பாதுகாப்பில் நாம் ஒவ்வொருவரும் அக்கறை கொள்வோம்.

**மனிதர்கள் எவ்வாறு சூழலை மாசுபடுத்துகின்றார்கள்**

- மரங்களை அழித்தல்
- நீர் வீண் விரயம்
- மிதமிஞ்சிய பொலித்தீன் பாவனை
- மின்சாரப் பாவனையில் அதிகமாகப் பாவித்தல்
- விறகு, எரிபொருட்களை அதிகமாகப் பாவித்தல்
- கழிவுப் பொருட்களை உரியமுறையில் அகற்றாமை
- வாழ்வாதாரத் தேவைக்காக காடழிப்பு
- தேவைக்கதிகமாக இரசாயன கிருமிநாசினிகள் மற்றும் பசளைகளின் பாவனை

**சூழல் மாசடைவதால் ஏற்படும் விளைவுகள்**

- காலத்திற்கேற்பவும் ,தேவைக்கேற்பவும் மழைவீழ்ச்சியைப்பெற்றுக்கொள்ள முடியாமை
- நிலத்தடி நீர் வற்றிப்போகும் அபாயகரமான நிலமை
- இனங்காண முடியாத மற்றும் நோய்களின் தாக்கம்
- விவசாய நிலங்களின் பாதிப்பு
- நன்னீர் உவர் நீராகும் தன்மை
- எதிர்காலச் சந்ததியினர்ஆரோக்கியமான சூழலில் வாழமுடியாமை

**சூழலைப் பாதுகாப்பதில் எமது பங்களிப்பு**

- இயன்றளவு மரங்களை நட்டுப் பராமரித்தல்
- நீர் வீண் விரயமாவதைத் தடுப்போம்
- தூவல்முறை நீர்ப்பாசனத்தினை முன்னெடுப்போம்
- குளங்களைப் புனரமைப்போம், பாதுகாப்போம்
- விவசாயத்தில் இயற்கைப் பசளை பயன்படுத்தல்
- பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்தல்
- மிதமிஞ்சிய வாகனப் பாவனையை இயன்றளவு குறைத்தல்

*"சூழல் மாசுறுதலைத் தடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைவோம் வாரீர்"*

தி.திருஷாந்

(3926)

# நாடும் மக்களும்

52

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

### கலாநிதி தெ.வே.மகாலிங்கம்

சில தொழில்களில் தேர்ச்சி பெற்ற இனத்தவர்களுக்கு இடவசதியும் வாழ்க்கைக்கு ஏற்ற வசதிகளையும் அரசாங்கம் அளித்ததினாலும், அவர்கள் ஓரிடம் விட்டு மற்றொரு பகுதிக்கு குடிமாற்றம் செய்தனர். தமிழ்நாட்டிலும், கர்நாடகத்திலும் விஜயநகரப் பேரரசு பரவிய பொழுது புதிய மாகாணங்கள் அமைவுற்றன.

இப்புதிய மாகாணங்களின் தலைநகர்களில் அரச சேவையை நாடியும் பொருள் தேடுவதற்கும் பலர்குடிபெயர்ந்தனர். பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் ஆந்திர நாட்டிலிருந்து பல வேளாளர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களில் குடியேறினர். தென்னாட்டில் உள்ளகோவில்களின் பெருமையையும் சமயாசாரியர்களுடைய சிறப்பையும் கண்டும் கேட்டும் மனச்சாந்தியடைவதற்குபல புண் ணியஸ் தலங்களில் பலர் குடியேறி வாழ்ந்தனர்.

#### மக்களின் தொழில்வேறுபாடு
#### (Classes of People)

ஒரு சமூகத்தில் உள்ள மக்களை பொருளியல் காரணமாக (Economic) பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், (மற்ற சேவைகளை செய்பவர்கள் என்றும்), அவற்றை நுகர்வோர் அல்லது அனுபவிப்பவர்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். அவர்கள் பணியும், சமூகத்திற்கு வேறு விதத்தில் தேவைப்பட்டது.

ஆனால் வெறும் பொருளியல் கண்ணில் நோக்கினால், அவர்கள் உற்பத்தியாளர்களின் நெற்றி வியர்வையிலும், உழைப்பிலும் வாழ்பவர்களே.

1.பேரரசில் முக்கிய பதவிகளை வகித்த நாயக்கர்கள் அல்லது பிரபுக்கள் அரசாங்கம் என்னும் கட்டடத்தின் தூண்கள் போல விளங்கினர். மாகாணங்களின் தலைவர்களாகவும் சேனாதிபதிகளாகவும் மற்ற அலுவலாளர்களாகவும் பதவி வகித்து பலவித சிறப்புரிமைகளை அனுபவித்து வந்தனர். ஒவ்வொரு நாயக்கருக்கும் ஏராளமான நிலங்கள் நாயக்கத் தானமாகக் கொடுக் கப்பெற்றிருந்தன. (இந்த நாயக்கர்கள்) அந்நிலங்களின் வருமானத்தை வசூல் செய்து அவ்வருமானத்தின் சரிபாதித் தொகையைப் பேரரசருக்குப் செலுத்த வேண்டும்.

அரசனுக்கு உற்றுழி உதவுவதற்காக ஓர் நிலமானியப் படையை வைத்துக்கொள்ள வேண்டும். அச்சுததேவராயர் காலத்தில் படைச் செலவை நாயக்கன்மார்கள் ஆறு இலட்சம் வீரர்களையும் இருபத்தி நான்காயிரம் குதிரைகளையும் வைத்துக் காப்பாற்ற வேண்டியிருந்தனர். இந்த நாயக்கன்மார்கள் அரசனிடமிருந்து நிலங்களைப் பெற்று அதற்கீடாகப் போர்ப்படையாகிய பாளையத்தை நிருவகித்தமையால் பாளையக்காரர்கள் என்றும் அழைக்கப்பெற்றனர். இந்தப் பாளையக்காரர்களுக்கு கொடுக்கப் பெற்ற நிலங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு ஆறு இலட்சம் வராகன் வருமானம் வந்ததென்றும் நிலங்களிலிருந்து மொத்தமாக ஒரு இலட்சத்து இருபதினாயிரம் வராகன் வருமானம் வந்ததென்றும், நிலங்களிலிருந்து மொத்தமாக ஒரு லட்சத்து இருபதினாயிரம் வராகன் வருமானம் வந்ததென்றும், வீரர்களுக்கு குதிரைப் படைகட்கும், யானைகளுக்கும் ஏற்பட்ட செலவுகளை பாளையக்காரர்களே செய்யவேண்டியிருந்ததெனவும் நூனிஸ் (சூரணை) என்பார் கூறியுள்ளார்.

அச்சுத தேவராயர் ஆட்சியில் வீர நரசிம்ம சாளுவ நாயக்கர் அல்லது சாளுவ தண்ட நாயக்கர் என்ற பெயர் கல்வெட்டுக்களில் அடிக்கடி காணப்பெறுகின்றது. இவர் சோழ மண்டலத்தில் மகா மண்டலீசுரராக நியமிக்கப் பெற் றிருந்தார். திருக்கோவலூர், புவனகிரி, தஞ் சாவூர், நாகப்பட்டினம், தேவிப்பட்டினம், காயல்பட்டினம் முதலிய பேரூர்கள் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இலங்கைத் தீவிற்கு அருகில் உள்ள இடங்களிலும் அவருடைய ஆட்சி நிலைபெற்றிருந்தது. அவருடைய ஆட்சிக் கடங்கிய மாநிலத்தின் வருமானம் ஆண்டொன்றிக்கு பதி னொரு இலட்சம் வராகன்களாகும். அதில் மூன்றில் ஒரு பகுதியை பேரரசனுக்குக் கொடுத்த பிறகு முப்பதினாயிரம் காலாட்படைகளையும், மூவாயிரம் குதிரை வீரர்களையும் நாற்பது யானைகளையும் வைத்துப் பராமரித்து வந்தார். விஜயநகரப் பேரரசில் இவ்வித நாயக்கன்மார்கள் இரு நூற்றிற்கு மேற்பட்டவர்கள் இருந்தனரெனவும், இவர்களிடையே பேரரசின் நிலங்கள் பிரிக்கப்பட்டிருந்தனவென்றும் நூனிஸ் கூறியுள்ளார். மேற்கூறப் பெற்ற நாயக்கன்மார்களுக்கு உதவி செய்யப் பல காரியதரிசிகள் இருந்தனர். விஜயநகரத்தில் பேரரசருடைய அரண்மனையின் வலது பக்கத்தில் திவான்கானா என்ற அமைச்சர்களின் காரியாலயம் இருந்தது. அக்காரியாலயம் நாற்பது தூண்கள் கொண்ட ஓர் சபை வடிவில் அமைக்கப் பெற்றிருந்தது. அதற்கு எதிரில் நூறடி நீளமும், ஆறடி அகலமும், ஆறடி உயரமும் உள்ள அடுக்குமாடியொன்று அமைந்திருந்தது.

அந்த அடுக்கு மாடிக்கு அருகில் பல எழுத்தர்கள் அமர்ந்திருந்தனர். அந்த மாடிகளில் அரசாங்கத்திற்குரிய ஆவணங்கள் எல்லாம் அடுக்கப் பெற்றிருந்தன என அப்துர் ரசாக் கூறுவர்.

தற்காலத்திய அரசாங்கங்கள் போலவே விஜயநகரப் பேரரசில் அரசியலைத் திறம்பட நடத்துவதற்கு பெரிய காரியாலயங்கள் இருந்தன. அக்காரியாலயங்களில் ஏராளமான அலுவலர்கள் பணியாற்றுவதற்கு ஏற்ற வாய்ப்புக்கள் இருந்தன. குடியானவர்களிடமிருந்து நிலவரியையும், வியாபாரிகளிடமிருந்து சுங்கம் முதலிய வரிகளையும் வசூல் செய்வதற்கு எண்ணற்ற பணியாட்கள் இருந்தனர். கிராமங்களில் மணியக்காரர், கௌடா (முன்சீப்), ஷன்போக் கணக்குப்பிள்ளை(கர்ணம்), தோட்டி,தலையாரி என்ற அலுவலாளர்கள் இருந்தனர். அரசியல் அலுவலர்கள் எவ்விதம் நியமிக்கப் பெற்றனர் என்றோ அவர்களுடைய அலுவல் நிலையைப் பற்றியோ அல்லது ஊதிய விகிதங்களைப் பற்றியோ நாம்தெளிவாக உணர்ந்து கொள்ளுவதற்கேற்ற ஏதுக்கள் இல்லை. கிராமங்களில் இறைவரியை வசூலித்தவர்களுக்கும் மற்ற அலுவலாளர்களுக்கும் மானியமாக நிலங்கள் கொடுக்கப் பெற்று இருந்தன.

நிலங்களை அனுபவித்து வந்த நாயக்கர் மார்கள் தாங்கள் அரசனுக்குச் செலுத்திய பகுதி போக எஞ்சிய தொகையைத் தாங்களே அனுபவித்தனர்.

விஜயநகரப் பேரரசில் பெரிய சேனை இருந்ததென்பதை நாம் முன்னரே பார்த்தோம். பேரரசின் நிலையான சேனையென்றும், நிலமானிய பிரபுக்களாகிய நாயக்கன்மார்கள் அனுப்பிவைத்த சேனைகள் என்றும் அச்சேனையை இருபகுதிகளாகப் பிரிக்கலாம். நிலையான சேனையின் எண்ணிக்கை 24 ஆயிரம் குதிரைகளும், ஒரு இலட்சம் காலாட்படையும் என துவார்த்தி - பார்போசா கூறியதை பீயசும் ஒப்புக் கொள்கிறார். விஜயநகர அரசர்கள் தங்களுடைய மெய்க்காப்பாளர்கள் போன்று கரி, பரி, காலாட்படை அடங்கிய சேனையொன்றை அமைந்திருந்தனர் என்று நூனிஸ் கூறியுள்ளார்.

இப்படையில் சுமார் 200பேர்கள் இருந்தனர். மொகலாய மன்னர்கள் அமைந்திருந்த அகாதிகளுக்கு Ahadis ஒப்பாக இவர்களைக் கூறலாம். (தொடரும்)

---

## சர்வாதிகாரி ஒருவரை நாட்டுக்கு அழைத்ததன் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளது

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

மியான்மார் சர்வாதிகாரியான தான் செவ்வை நாட்டுக்கு அழைத்து கௌரவப் படுத்தியதன் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்திற்கு எதிரான வகையில் செயற்பட்ட ஓர் இராணுவ ஆட்சியாளருக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிவரும் முக்கியத்துவம் அதிருப்தியளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மியான்மாரில் ஜனநாயக ரீதியில் ஆட்சியை நிறுவிய அன்சான் சூகியை கைது செய்து, சூழ்ச்சியின் மூலம் நாட்டைக் கைப் பற்றிய தான் செவ்வை இலங்கைக்கு அழைத்தமை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயிரம் பௌத்த பிக்குகளை படுகொலை செய்யக் காரணமாக இருந்த இராணுவ ஆட்சியாளராகிய தான் செவ் என்பவருக்கு, தலதா மாளிகையைத் தரிசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகார ஆட்சியாளர்களுடன் தற்போதைய அரசாங்கம் கொண்டுள்ள உறவுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மெய்யான ஆதரவாளர்கள் எதிர்ப்பார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

---

## அனுராதபுரத்தில் 27 நாட்களுக்குள் 9 பேருக்கு மரணதண்டனை

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

அனுராதபுரம் உயர் நீதிமன்றம் கடந்த 27 நாட்களுக்குள் ஒன்பது பேருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுர உயர்நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசுந்தரவினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் நீதிமன்ற வரலாற்றில் குறுகிய காலத்திற்குள் அதிகளவு மரண தண்டனை தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் நான்கு பேர் இராணுவச் சிப்பாய்கள் எனவும், இரண்டு பேர் பிரபல வர்த்தகர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும், இலங்கையில் மரண தண்டனை நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

---

## இலங்கை அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் புலி ஆதரவாளர்கள் இன்றும் ஈடுபடுகின்றனர்

### தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் தவறான செய்திகளை வெளியிட்டு இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதான முயற்சிகளில் சர்வதேச நாடுகளில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளுக்குச் சார்பான சில தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று தென்னாபிரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் மைட்டே நகோவானா மாஷா பானே தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமொன்றினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்து உரையாடினார்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றுதல் மற்றும் அந்தப் பிரதேசங்களில்முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வாறானதொரு கலந்துரையாடலுக்கு மத்தியில் இரண்டு நாடுகளுக்கு மத்தியில் நிலவும் நட்புறவை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதியிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் மைட்டே நகோ வானா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர் தொடர்ந்தும் கூறுகையில் தமது நாடும் இவ்வாறான சவால்கள் மற்றும் அனுபவங்களுக்கு முகம்கொடுத்துள்ளது.

இந்நிலை யில் இலங்கைக்காக தென்னாபிரிக்காவினால் முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கண்டறிவதான நோக்கத்துடனேயே இந்த விஜயத்தினை மேற்கொண்டுள்ளேன்என்றார். (ஓ-6)

---

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 இற்கு புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடைவிலகல் பாடம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள் ளது.

இச் செயலமர்வுக்கு குறித்த ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

# எவ்வாறான குற்றச் சாட்டுக்களை முன்வைத்த போதிலும் ச. நா. நிதியம் கடன் வழங்குகின்றது



## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

எவர் எவ்வாறான குற்றச் சாட்டுக்களை முன்வைத்த போதிலும் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு கடன் வழங்கி வருவதாக ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக சர்வதேச அமைப்புக்களினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களின் மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை தடுத்து நிறுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தமொன்று நடைபெற்று வுரும் சந்தர்ப்பத்திலும் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல அரசாங்கம் காட்டி வரும் அர்ப்பணிப்பை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கொழும்பு நகர எல்லைக்குள் சுகமளிக்கும் ஆராதனைகள் நடத்தப்படுவதை தடை செய்ய காவல்துறையினர் தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு நகர் எல்லைக்குள் சுகமளிக்கும் ஆராதனைகள் நடத்தப்படுவதை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்ய பொலிஸார் தீர்மானித்துள்ளனர். கொழும்பு பொலிஸ் தலைமையகத்தின் தேசிய சங்க சம்மேளனத்தின் பௌத்த பிக்குகள் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவைச் சந்தித்த போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு நகரத்திற்குள் எதிர்காலததில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தேவ ஆராதனைகளை நடத்த இடமளிக்காத வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அண்மையில் விகாரமாதேவிப் பூங்காவில் இடம்பெற்ற ஆராதனையொன்றின் போது இருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் இதற்குத் தேவையான சட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் பொலிஸ் அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்ததாக தேசிய சங்க சம்மேளனத்தின் செயலாளர் பச்சரமுல்லே தயாவன்ச தேரர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பொலிஸுக்கு எதிராக வேலையற்ற பட்டதாரிகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிராக வேலையற்றப் பட்டதாரிகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். அண்மையில் வேலையற்ற பட்டதாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தின் போது பொலிஸார் நடந்து கொண்ட விதம் அதிருப்தியளிப்பதாக பட்டதாரிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கண்மூடித்தனமான முறையில் பொலிஸார் தாக்கியதாக முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அமைப்பாளர் சுஜித் குருவிட்ட தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற எதிர்ப்பு போராட்டத்தின் போது நடாத்திய தாக்குதலில் சில வேலையற்ற பட்டதாரிகள் காயமடைந்துள்ளதர்க அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசிக்க முனைந்த பட்டதாரிகளை பொலி ஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மற்றும் தடிஅடி பிரயோகத்தைத் தடுத்தனர்.

இதேவேளை 17 ஆயிரம் வேலையற்றப் பட்டதாரிகளுக்கு அரச பணி வழங்குவதாக அளிக்கப்பட்டுள்ள உறுதி மொழி தொடர்பில் பட்டதாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தேர்தல் நோக்கத்திற்காக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பட்டதாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஓ-6)

# அரச ஊழியர்கள் 2, 61, 897 பேருக்கான மாதாந்த கொடுப்பனவு ரூ.20 ஆயிரம் மில்.

## அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா



(கொழும்பு)

2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் 58 ஆயிரத்து 756 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் அரீச துறைகளில் 2 இலட்சத்து 61 ஆயிரத்து 897 பேர் இருக்கின்றனர்.

இவர்களுக்கு மாதாந்த சம்பளம், கொடுப்பனவு ஆகியவற்றை வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு மாதாந்தம் 20 ஆயிரம் மில்லியன் ரூபா செலவாகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட செய்தியாளர்கள், முக்கிய துறைகளைச் சேர்ந்தவர்கள் சம்பள அதிகரிப்பு கோரிக்கையை முன்வைத்து சட்டப்படி வேலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டிருக்கலாமே என கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது,

அரச துறைகளில் தற்போதைக்கு 2 இலட்சத்து 61 ஆயிரத்து 897 பேர் கடமையாற்றுகின்றனர். அவர்களுக்கான சம்பளம் கொடுப்பனவுகளுக்கென அரசாங்கம் மாதாந்தம் 20 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவிடுகின்றது. 4 இலட்சத்து 65 ஆயிரம் பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். அவர்களுக்கென மாதாந்தம் அரசாங்கம் 6250 மில்லியன் ரூபாவை செலவிடுகின்றது.

அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் கடந்த காலங்களில் சம்பளத்தை அதிகரித்தது. ஜனவரி முதல் சம்பளத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே அரசாங்க தொழிற்சங்கங்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

தற்போது முன்னெடுக்கும் போராட்டம் தொழிற்சங்க போராட்டமல்ல. அது அரசியல் போராட்டமாகும். 50,60 ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டமே இன்று முன்னெடுக்கப்படுகின்றது என்றார். (ஓ-6)

# நாட்டில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் சிறார்கள் கண்பார்வை குறைபாட்டுக்குள்ளாகியுள்ளனர்

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இந்நாட்டில் ஏறக்குறைய 1 இலட்சத்து 60 ஆயிரம் சிறார்கள் கண் பார்வைக் குறைபாட்டுக்கு உள்ளாகியிருப்பது சுகாதார அமைச்சு மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கண்புரை (கெட்ரக்) நோயும் நீரிழிவு நோய் சார்ந்த சிக்கல் நிலைகளுமே இலங்கை மக்களின் பெரும்பாலானோர் கண் பார்வை இழப்பதற்கு பிரதான காரணிகளென கண்டறியப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 1 இலட்சத்து 60 ஆயிரம் சிறுவர்கள் கண் பார்வை குறைபாட்டுக்கு உள்ளாகியிருப்பதோடு 45 ஆயிரம் சிறார்கள் 'ஒக்குவர்' எனும் கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சரியான நேரத்திற்கு தகுந்த சிகிச்சை பெறாத ஏறக்குறைய 75 சதவீத மானோர் கண்பார்வையை இழக்க நேரிடுவ தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டு பல்வேறு பிரதேசங்களில் கண் சிகிச்சை நிலையங்களை நிறுவி இலவசமாக கண் பரிசோதனைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அடுத்தாண்டு முதல் விஸ்தரிக்கப்படும்

## அமைச்சர் நியோமல் பெரேரா

(கொழும்பு)

இலங்கைக் கரையோரப் பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் வேறு நாட்டு படகுகள் பிரவேசிப்பதனை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வருடம் முதல் இந்த நடவடிக்கைள் மேலும் விஸ்தரிக்கப்படும் என பிரதி மீன்பிடி வள அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, பிரான்ஸ், மடகஸ்கர், தென் ஆபிரிக்கா, தாய்லாந்து மற்றும் தாய்வான் போன்ற நாடுகளது மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு வெளிநாட்டு படகுகளினால் மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளினால் இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)





கரவெட்டி மேற்கு கரணவாய் மழலைகள் கல்விப்பூங்கா முன்பள்ளியின் 17 ஆவது ஆண்டு விளையாட்டு விழாவில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-I

ப.சண்முகம், சி.தினேஸ்
(ஆசிரியர்கள், வட்டு. மத்திய கல்லூரி)


### பகுதி - A

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. $1^1/4\ l$ குளிர்பானத்தை 5 பேருக்குச் சமமாகப் பங்கிடும்போது ஒருவருக்கு கிடைக்கும் குளிர்பானத்தின் அளவை ml இல் தருக?


02) 0.5% ஐ பின்னமாகத் தருக?

03) (1,5,3) என்னும் தாயத்தின் வரிசை யாது?

04) 

எண்கோட்டில் குறித்துக்காட்டப்பட்டுள்ள சமனிலியைக் குறியீட்டில் தருக?

05) $\dfrac{0.1 \times 0.1}{0.1 + 0.1}$ இன் பெறுமானம் யாது?


06) நிழற்றிய பகுதியைப் பின்னமாகத் தருக? 

07) தரப்பட்டுள்ள தரவுத் தொகுதியின் இடையத்தைக் காண்க?

08) $log_3 x = {}^-1$ எனின் $x$ இன் பெறுமானம் யாது?

09) A யிலிருந்து B யின் திசைகோள் 230' எனின் B யிலிருந்து A யின் திசைகோள் யாது?

10) $11001_{இரண்டு} - 1011_{இரண்டு}$ என்பதன் விடையைத் துவித எண்ணில் தருக.

11) 

எனின் $x$ இன் பெறுமானம் யாது?

12) $2x + 3y = 11$
$3x + 2y = 14$ எனின் $(x+y)$ இன் பெறுமானம் யாது?


13) சுருக்குக $\dfrac{x}{(x+1)^2} + \dfrac{1}{(x+1)}$

14) $T = 2\pi\sqrt{l/g}$ என்னும் சமன்பாட்டில் $l$ ஐ எழுவாயாக மாற்றுக.


15) $-5 < x \leqslant 3$ எனும் சமனிலியில்
i) $x$ இன் மிகச்சிறிய நிறை எண் பெறுமானம் யாது?
ii) $x$ இன் மிகப் பெரிய நிறை எண் பெறுமானம் யாது?

16) $x = -2, y = 3$ எனின் $\dfrac{10x^2y}{y-x}$ இன் பெறுமானம் யாது?

17) O வட்டத்தின் மையமாகும். தரப்பட்ட உருவில் $x, y$. ஆகியவற்றின் பருமனைக் காண்க.





18) தரப்பட்ட உருவில் $\Delta CDE$ இன் பரப்பளவு $40cm^2$ எனின் உருவில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி,
i) இணைகரம் ABCD இன் பரப்பளவு யாது?
ii) $\Delta ABE$ இன் பரப்பளவு யாது?




19) $\dfrac{3}{5} : 2 = (x+1) : 5$ எனின் $x$ இன் பெறுமானத்தைக் காண்க?

20) $10cm$ ஆரையுடைய வட்டத்தின் மையத்திலிருந்து $6cm$ தூரத்தில் வரையப்பட்டுள்ள நாணின் நீளம் யாது?

21) O ஐ மையமாக உள்ள வட்டத்தில் உள்ள $P$ இல் வரையப்பட்டுள்ள ஒரு தொடலி $PR$ ஆகும். (உருவைப் பார்க்க) $Q\hat{P}R = 48^o$, எனின் $x, y$ இன் பெறுமானத்தைக் காண்க.





22) A,B என்பன இரு மூட்டற்ற தொடைகள் எனின்
n(A)=15, n(AUB) = 39 ஆயின் n(B) ஐக் காண்க?

23) வாகனமொன்றை இறக்குமதி செய்யும்போது 25% தீர்வை செலுத்தப்படவேண்டும் ரூபா 500 000 பெறுமதியான வாகனத்தைக் கொள்வனவு செய்யும்போது தீர்வை செலுத்தப்பட்ட பின் வாகனத்தின் பெறுமதி யாது?

24) $x + y = 7, xy = 12$ எனின் $x^2 + y^2$ இன் பெறுமானம் யாது?


25) ரூபா 10 பெறுமதியான பங்குகளை சமத்திலும் ரூபா 3 அதிகமான விலையில் வாங்குவதற்கு ரூபா 6500 ஐ முதலிட்டால் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?

26) இரு எண்களின் பெருக்கல் இடை 16 ஆகும். அவற்றில் ஒரு எண் மற்றைய எண்ணின் நான்கு மடங்காகும். அவ்விரு எண்களையும் காண்க?


27) 

i) $\Delta PQS$ உம் $\Delta PRS$ உம் எந்நிபந்தனையில் ஒருங்கிசைகின்றன.
ii) QR = 12cm , PS=8 cm எனின் PQ இன் நீளம் யாது?

28) ரூபா $X$ கொள்வனவுள்ள ஒருபொருள் 18% இலாபத்தில் ரூபா 708 இற்கு விற்கப்பட்டது எனில் $x$ இன் பெறுமானத்தைக் காண்க?

29) $Sin\,\theta = \sqrt{5}/3$ எனின் $Cos\theta, tan\theta$ இன் பெறுமானம் யாது? 


30) A,B என்பன இரு நிலைத்த புள்ளிகள் ஆகும். புள்ளி C ஆனது $A\hat{C}B = 90^o$ ஆகுமாறு அமைகின்றது. புள்ளி C இன் ஒழுக்கு யாது?




### பகுதி - B

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) ஒருவர் தனது காணியின் $^1/3$ பங்கை மகனுக்கும் எஞ்சியுள்ள காணியின் $^3/4$ பங்கை மகளுக்கும் வழங்கினார். மிகுதியாகவுள்ள காணியை ரூ.600000 விலைக்கு விற்பனை செய்தார்.
i) மகளுக்கு வழங்கிய காணி முழுக்காணியின் என்ன பங்காகும்?
ii) மிகுதியாகவிருந்து விற்பனை செய்த காணி முழுக்காணியின் என்ன பங்காகும்?
iii) மேற்படி விற்பனை விலையின் அடிப்படையில் முழுக்காணியின் பெறுமதி எவ்வளவு?
iv) மகனுக்கு வழங்கிய காணியின் பெறுமதி எவ்வளவு?
v) மகளுக்கு வழங்கிய காணியின் பெறுமதி எவ்வளவு?

02) பெரிய அரைவட்டம் ஒன்றின் விட்டத்தின் மீது ஒவ்வொன்றும் 7cm ஆரையுள்ள இரண்டு அரைவட்டங்கள் இருக்குமாறு உரு வரையப்பட்டுள்ளது.



i) சிறிய அரைவட்டத்தின் விட்டம் யாது?
ii) பெரிய அரைவட்டத்தின் விட்டம் யாது?
iii) நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?
iv) நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?
v) $1\ cm^2$ இற்கு வர்ணம் பூசுவதற்கு ரூபா 20.00 செலவாகும் எனின் (மேலே iv) உள்ள பகுதிக்கு மை பூசுவதற்கு எவ்வளவு பணம் செலவாகும்?

03) மாம்பழம் ஒன்றினதும், தோடம்பழமொன்றினதும் விலைகளுக்கிடையிலான விகிதம் 2:3ஆகும்.
i) இவ்விரு பழங்களில் விலை கூடிய பழம் எது?
ii) இரு பழங்களினதும் விலை ரூ 60 எனின், மாம்பழமொன்றின் விலையைக் காண்க?
iii) அவ்விடத்தில் இருந்த கொய்யாப்பழமொன்றினதும் தோடம் பழமொன்றினதும் விலைகளுக்கிடையிலான விகிதம் 5:6 ஆகுமெனின் மாம்பழத்தினதும், தோடம்பழத்தினதும், கொய்யாப்பழத்தினதும் விலைகளுக்கிடையிலான விகிதத்தைக் காண்க?
iv) மேலேயுள்ள விகிதத்தின் படி மாம்பழத்தின் விலை ரூ 20எனின் கொய்யாப் பழத்தினதும் தோடம்பழத்தினதும் விலைகளைத் தனித்தனியே காண்க?

04) 30 நிறுவனங்கள் ஒரு மாதத்தில் பயன்படுத்திய மின்சார அலகு தொடர்பான தரவு கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மின் அலகுகள் | 100-105 | 106-110 | 111-115 | 116-120 | 121-125 | 126-130 | 131-135 |
|---|---|---|---|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 1 | 5 | 6 | 8 | 5 | 3 | 2 |


i) ஆகார வகுப்பு யாது?
ii) 126 மின் அலகுகளுக்கு அதிகமாகப் பயன்படுத்திய நிறுவனங்களின் எண்ணிக்கையைக் காண்க?
iii) ஆகார வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு மாதம் ஒன்றில் நிறுவனம் பயன்படுத்திய மின் அலகுகளின் இடையை கிட்டிய முழுவெண்ணில் தருக?
iv) இதுபோன்ற 100 நிறுவனங்களில் ஒருமாதத்திற்கு பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் மின் அலகுகளைக் கணிக்குக?

05) ஒரு கிராமத்திலுள்ள Y.M.H.A சங்கத்தின் சுற்றுலா ஏற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. காலிக்குச் சென்றுள்ளவர்கள் 16பேர். கொழும்புக்குச் சென்றுள்ளவர்கள் 24பேர். கண்டிக்குச் சென்றுள்ளவர்கள் 15பேர் காலிக்குச் சென்ற அனைவரும் கொழும்புக்குச் சென்றுள்ளனர் மூன்று இடங்களுக்கும் 5 பேர் சென்றுள்ளனர்.
i. மேற்குறித்த தரவுகளை வென்வரிப்படத்தில் குறிக்குக?
ii. குறைந்த இரண்டு நகரங்களுக்குச் சென்றவர்கள் எத்தனைபேர்?
iii. நிழற்றப்பட்ட பகுதியில் காணப்படுபவர்களைப் பற்றி விளக்குக?
iv. Y.M.H.A சங்கத்தில் உள்ள மொத்த அங்கத்தினர் எண்ணிக்கை யாது?



# பீடை நாசினிகளின் தோற்றமும் வகைகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XXI



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மொனோ குறோட்டபொஸ் எனும் இப் பூச்சிநாசினி ஒரு காலத்தில் எங்களூர் விவ சாயிகளுக்கு சர்வரோக நிவாரணி போன்றே தொழிற்பட்டது.

பயிர்களில் எந்த விதமான பூச்சித் தாக் கத்திற்கும் எதிராக அவற்றைக் கட்டுப் படுத்த இப்பூச்சி நாசினிகளை அதிகளவில் அளவுக்கு மீறி தேவையற்ற விதத்தில் விவ சாயிகள் விசிறியதனால் இப்பூச்சி களுக்கெ திராக வகை தொகையின்றி பயன்படுத்தி யதால் இதனது பாவனையை கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று.

இதன் காரணமாக மொனோகுறோட்ட பொஸ் போன்ற சிறந்த பூச்சி நாசினிகளை அரசு மக்கள் பாவனையிலிருந்து அகற்றி விட்டது.

ஆனாலும் தேவைகருதி இவற்றை இறக்குமதி செய்ததுமுண்டு. தென்னையில் சேதத்தை ஏற்படுத்தும் சிற்றுண்ணியை கட்டுப்படுத்துவதற்காக மட்டும் இதன் பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு கல்லில் இருமாங்காய் போல பூச்சி யையும், சிற்றுண்ணி போன்றவற்றையும் அழிப்பதற்கு மொனோகுறோட்டபொஸ் போன்றவற்றை சிறப்பாக பயன்படுத்திய நிகழ்வுகளும் உண்டு.

ஓர்கனோ பொசுபேற்றுக்குரிய இவ்வளவு சிறப்பியல்புகளையும் மொனோ குறோட்ட பொஸ் கொண்டிருந்தும் விவசாயிகளினது அதிகரித்த பயன்பாட்டினால் தற்போது இது பயன்பாட்டிலில்லை. என்பது என்றுமே ஒரு கசப்பான செய்தியாகும்.

ஆனால் இத்தொகுதிக்குள் உள்ளடங்கிய டைமீதோயிற்று என்டோசல்பான் போன் றவை அதிகமாக பயன்பாட்டில் இன்றும் உள்ளன என்பது ஆறுதல் தரும் செய்தி யன்றோ.

ஓர்கனோ பொசுபேற்றின் சிறப்புக்களைத் தொடர்ந்து அடுத்த சந்ததி பூச்சி நாசினிகளாக கார்பனேற்றுக்கள் உள்ளடக்கப்பட்டன. இவை பொதுவான பீடை நாசினிகளாக இருந்ததுடன் பலகாலம் வாழ்ந்த பீடை நாசி னிகளாகவும் உள்ளன.

பூச்சி நாசினிகளின் வகைகளை சரியாக இனங் கண்டு கொள்வதிலிருந்து இவற்றி னது பயன்பாட்டை தேவைக்கேற்ப பயன் படுத்துவதுடன் தேவையற்ற பிரயோகத்தை யும் தவிர்த்துக் கொள்ள முடியுமல்லவா!

**என்டோசல்பான்** (Endosulphan)

இதுவொரு குளோரினேற்று ஐதரோகாப னும் சேதன சல்பைற்றும் சேர்ந்த கூட்டு ஆகும்.

தொடுகை மூலமாகவும் (Contact) உணவுடன் சேர்ந்து சென்று இரைப்பையை தாக்கும் (Stomach poison) திறனுடையது.

குறிப்பாக வெட்டியுண்ணும் வாயுறுப் பையுடைய பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத் தும் சிறப்புடையதாகவும் சாறு உறுஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தவல்லனவாகவும் இருந்ததால் எமது நாட்டில் பல பூச்சி பீடை களை கட்டுப்படுத்த சிபார்சு செய்யப்பட் டது.



குறிப்பாக கோவா பயிரின் ஆரம்ப கால இளநிலைப் பருவத்தின் இலைகளை வெட்டி சேதத்தை யேற்படுத்தி இறுதியில் பயிரினை முழுதாக அழித்து விடும்.

கருமைநிற வண்டு (Flea beetle) இனை கட்டுப்படுத்த சிபார்சு செய்யப்பட்டது. தவறா னதும் அதிகரித்ததுமான அளவில் என்டோ சல்பான் இனை விவசாயிகள் பயன்படுத்தி யதால் 1998 ஆம் ஆண்டு இலங்கையில் இதன் விற்பனை தடை செய்யப்பட்டது.

ஆயினும் அங்குமிங்குமாக ஒளித்து வைத்து ஒரு சிலர் பயன்படுத்தியதாக அறிய முடிகின்றது.

மயிர் கொட்டிப் புழுக்கள் (Caterpillars) மற்றும் தண்டு துளைப்பான் போன்றவற்றை கட்டுப்படுத்த வல்ல இப்பூச்சி நாசினியை எம்மவர்களின் தவறான, தேவையற்ற, சூழல் கரிசனையற்ற செய்கைகளால் பாவனையி லிருந்து அகற்ற வேண்டி வந்துவிட்டது.

**தேனீக்களில் பாதிப்பில்லை**

வேளாண் செய்கையில் தேனீக்களின் உதவி என்றுமே எமக்கு பக்கபலமாக இருக் கிறது.

அதிலும் அயன் மகரந்த சேர்க்கையுடைய பயிர்களில் காய் நிறைய பிடிப்பதற்கு தேனீ போன்ற சமூக அந்தஸ்த்தும் பொறுப்புமு டைய பூச்சியினங்களின் பிரசன்னம் மிக மிக அவசியமாகும்.

ஆகவே இப் பூச்சிநாசினிகளின் பூச்சி பீடைகளை கட்டுப்படுத்துவதற்காக விசிறப்பட் டாலும் அந்த வேளாண் சூழல் தொகுதியிலி ருக்கும் நன்மைதரும் பூச்சிகளான இரை கௌவிகள் மற்றும் ஒட்டுண்ணிகளை அழிக் கக் கூடியனவாக இருந்தலாகாது.

அந்த வகையிலே என்டோசல்பான் தேனீக்களையும் நன்மை தரும் பூச்சிக ளையும் எதுவித பாதிப்புக்குள்ளாக்கவில்லை என கண்டறியப்பட்டது.

(தொடரும்)

# சேதனப் பசளை உற்பத்தி

❁ பின் பொலித்தீனின் மேல் பகுதியை அகற்றி கலவையின் நடுப்பகுதியினுள் கையால் தொடும் போது நகச்சூட்டு வெப்பநிலை (35-45 பாகை செல்சியஸ்) உணரப்படின் கலவையை நன்கு கிளறிவிடல் வேண்டும். நகச்சூட்டு வெப்பநிலை உணரப்படாவிடின் கிளறவேண்டிய தேவையில்லை.

6' நீளம் 4' அகலம் 10" உயரம் கொண்ட மரத்தாலான கூடு




6' நீளம் 4' அகலம் 10" உயரம் கொண்ட மரத்தாலான கூட்டினுள் பொலித்தீன் விரிக்கப்பட்டுள்ளது



❁ மீண்டும் பொலித்தீனால் கலவையை இறுக்கமாகக் கட்டி மரத்தாலான கூட்டினை அகற்றி மரக்கூட்டினை தொடர்ந்து (EM) கூட்டெரு தயாரிக்க பயன்படுத்த முடியும்.

❁ (EM) கூட்டெரு தயாரிக்கப்பயன்படுத் தும் கழிவுகள் உக்கலடையும் தன்மையைப் பொறுத்து அது முதிர்வடைய எடுக்கும் காலம் வேறுபடும் இலகுவில் உக்கலடையக் கூடிய அவரைக் குடும்பத் தாவ ரங்களின் இலைகள் மற்றும் புல் வகைகளி லிருந்து (EM) கூட் டெருவை 10 நாட்களில் தயாரிக்க முடியும்.




❁ மேல் குறிப்பிட்ட கலவையானது கறுப்பு நிறமாக மாறியுள்ள தாயின் அதுவே பயிர்களிற்கு பயன்படுத்த உகந்த (EM) கூட்டெருவாகும். இதை கைக ளால் தூளாக் கும் போது மிருதுவான உதிரும் தன்மை உணரப்படின் கூட் டெருவானது நல்ல நிலையி லுள்ளது என்பதை அறிந்து கொள்ள லாம்.

**100 கிலோ கூட்டெருவின் பெறுமதி**

100 கிலோ (EM) கூட்டெருவை முதல் தடவை பெற அண்ணள வாக ரூபா.1910.00 செலவாகின்றது. இங்கு கறுப்புப் பொலித்தீன் மரக்கூடு என்பவை மூலதனச் செலவாக காணப்படுகின்றது.

எனவே தொடர் ந்து (EM) கூட்டெருவை தயாரிப்பதற்கு அண்ணளவாக ரூபா.170.00 செலவாகின்றது.

செலவின் விபரம் வருமாறு,

**மூலதனச் செலவு**

1 கிலோ பொலித்தீன் (1000கேஜ்தடிப்பு) ரூபா.240.00

மரக்கூடு ரூபா.1500.00

**நடைமுறைச் செலவு**

100 கிலோ இலை குலை சருகு ரூபா. 100.00

10 கிலோ மாட்டுச்சாணம் ரூபா.20.00

100 மி.லீ.(EM) முதன்மைத் திரவம் ரூபா.38.00

100 கிராம் சர்க்கரை ரூபா.12.00

(EM) கூட்டெருவின் பாவனை முறை

❁ இக்கூட்டெருவை சாக்குகளிலோ அல்லது கறுப்பு பொலித்தீன் பைகளிலோ அடைத்து சூரியஒளி மழை என்பவற்றிலி ருந்து பாது காத்து அரை வெப்பநிலையில் 90 நாட்கள் வரை வைத்து பாவனைக்குட் படுத்தலாம்.

❁ பயிர்களிற்கு நிலத்தைப் பண்படுத்தும் போது குழி ஒன்றிற்கு 200-300 கிராம் எனும் அளவிலும் பூக்கும் காலத்தில் நிலை யம் ஒன்றிற்கு 100 கிராம் எனும் அளவி லும் (EM) கூட்டெரு பாவித்தல் போதுமானது.

❁ நெற் செய்கையில் நிலத்தைப் பண் படுத்தும் போது ஏக்கரிற்கு 1.5 டொன் (EM) கூட்டெரு பாவிக்க வேண்டும்.

(EM) முதன்மைத் திரவம் பெறுவதற்கு சர்வோதயம் 2 ஆம் குறுக்குத்தெரு வவு னியா. தொலைபேசி இல.024-222 4949 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்பின் தங்கள் பகுதி விவசாயப் போத னாசிரியர்களை அணுகவும். (முற்றும்)

**திருமதி லதா. ஜனகன்**
விவசாயப் போதனாசிரியர்
தலைமைப்பீடம்

**திருமதி. சுந்தரவதனி நிமலன்**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்)
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

# உலக நீரிழிவு தினம்

உலக நீரிழிவு தினமானது ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தும் இன்சுலின் மருந்தினை சார்ள்ஸ் பெஸ்ட் (Charles Best) என்பவருடன் இணைந்து 1921 ஆம் ஆண்டு கண்டுபிடித்தவரான பிறட்றக் பான்ரிங் (Fredrick Banting) என்பவரின் பிறந்த தின நினைவாக இந்நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தில் சர்வதேச ரீதியில் ஏறத்தாழ 150 நாடுகளில் உள்ள மக்கள் ஒன்றிணைத்து இந் நோய் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நோயினால் பரந்தளவில் ஏற்படும் தாக்கத்தினைக் கருத்தில் கொண்டு உலக நீரிழிவு தினமானது சர்வதேச நீரிழிவு சம்மேளத்தினாலும் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் 1991 ஆம் ஆண்டு முதன்முறையாக அறிமுகப்படுத்தி வைக்கப் பட்டது. தொடர்ந்து , ஐக்கிய நாடுகள் சபையினால் 2006 ஆம்ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 61/225 தீர்மானத்திற்கமைவாக இத் தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் அனுசரிக்கும் ஒரு தினமாக பிரகடனப் படுத்தப் பட்டது.

இத்தினத்திற்கான தொனிப்பொருள் " நீரிழிவு சம்பந்தமான அறிவும் பாதுகாப்பும்" எனக் கருதப்படுகின்றது.மற்றும் , இலச்சினையிலுள்ள வட்டம் "வாழ்வும் நலமும் " என்கின்ற பொருளுடனும் நீல நிறமானது சகல நாடுகளையும் இணைக்கும் ஆகாயத்தையும் ஐ.நா.சபையின் கொடியின் வர்ணத்தையும் குறிக்கின்றது.இதைவிட , நீல நிற வட்டமானது நீரிழிவு என்கின்ற கொடிய நோயினை எதிர்த்து உலகளாவிய ரீதியில் மக்கள் ஒருங்கிணைந்துபோராடுவதையும் குறிக்கின்றது.

இத்தினத்தில் உலகளாவிய ரீதியில் பல நாடுகளிலுமுள்ள 500 க்கும்மேற்பட்ட முக்கிய பிரசித்தி வாய்ந்த இடங்கள் நீல நிறமான ஒளிப்பிழம்பாகக் காட்சியளிக்கவிருக்கின்றன. இதுவரை ஏறத்தாழ 40 நாடுகள் இவ்வாறான விசேட ஒழுங்கிற்கு உடன்பட்டுள்ளன. இவ்வாறான நாடுகளின் பட்டியலில் ஆர்ஜன்ரைனா 100முக்கியமான இடங்களிலும் ,யப்பான் 86 இடங்களிலும் , பிறேசில் 64 இடங்களுமாக முன்னணியில் இருக்கின்றன.

இதற்கு முன்னோடியாக , இன்சுலின் மருந்தின் பிறப்பிடமான கனடா நாட்டின் மொன்றியலில் இவ்வருடத்தின் முற்பகுதியில் நடைபெற்ற உலக நீரிழிவு மகாநாட்டின் தொடர்ச்சியாக முதலாவது நீல நிற ஒளிப் பிளம்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலக நீரிழிவு தினத்தில் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் பல முக்கியமான நிகழ்வுகளை அனுசரித்து வருகின்றது. அந்த வகையில் உலக நீரிழிவு தினமும் முக்கியமானதொரு நிகழ் வாகும்.இத்தினத்தில் உலகளாவிய ரீதியில் 13 இலட்சத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுடன் இயங்கும் 45000 க்கு மேற்பட்ட லயன்ஸ் கழகங்கள் நீரிழிவு சம்பந்தமான பல செயற்திட்டங்களை நடாத்தி மக்களுக்கு விழிப்புணர்வினையும் நோய் சார்ந்த உதவிகளையும் செய்து வருகின்றன.

## இன்று நவம்பர் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது

உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி 246 கோடி மக்கள் இந் நோயின் தாக்கத்திற்குட்பட்டிருப்பதாகவும் 2025 ஆண்டளவில் இத்தொகையானது 380 கோடியினை எட்டக்கூடுமெனவும் அஞ்சப் படுகின்றது.நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்ச்சியாக 15 வருடங்களுக்கு இருப்பவர்களில் 2வீதமா னோருக்கு கண் பார்வை இழப்பும் 10 வீத மானோருக்கு பாரதூரமான கண்பார்வைக் குறைவும் ஏற்படுவதாக அறிக்கைகள் தெரி விக்கின்றன.

நீரிழிவு நோயுடன் இரத்த அழுத்தம் மற்றும் புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவர்களுக்கு கண் பார்வைத்தாக்கம் ஏற் படும் ஆபத்து அதிகமாகக் காணப்படும்.

லயன்ஸ் கழகங்கள்" பார்வைக்கு முதலிடம்" என தங்களுடைய செயற்றிட்டங்களை முன்னுரிமைப்படுத்தி வைத்துள்ள நிலையில் நீரிழிவு நோயினால்பாதிக்கப்பட்டவர்க ளுக்கு பார்வைக்குறைபாடு சம்பந்தமான ஆபத்து இருப்பதனால் லயன்ஸ் கழகங்கள் உலக நீரிழிவு தினத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளன.

நீரழிவுடன் இணைந்த பார்வை இழப்பினை புதிதாக இனங்காணும் நீரிழிவு நோயாளிகளிடமிருந்து குறைக்கும் நோக் குடன், 1984 ஆம்ஆண்டு பங்குனிமாதம் தொடக்கம் லயன்ஸ் கழகங்கள் நீரிழிவு விழிப்புணர்ச்சியினை ஒரு நீண்டகால செயற்றிட்டமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன் பிரகாரம், நீரிழிவு சம்பந்தமான அறிவுரைகள், தடுப்புமுறைகள் ஆராய்ச்சிகள் என்கின்ற செயற்றிட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. நீரிழிவு நோயாளர்கள் வருடாந்தம் தங்களுடைய கண்களைப் பரிசோதிப்பது அவசியமாகும்.

கடந்த ஆடிமாதம் அமெரிக்க நாட்டின் மினியோபோல்ஸ் நகரில் நடாத்தப்பட்ட 92 ஆவது சர்வதேச லயன்ஸ் கழகங்களின் வருடாந்த மகாநாட்டில் " நீரிழிவுடன்கலந்த பார்வை சம்பந்தமான நோய்கள்" என்கின்ற மிக வும் முக்கியமானதொரு பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டு லயன்ஸ் கழகங்கள் எவ்வாறு நீரிழிவு சம்பந்தமான செயற்றிட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாமென ஆராயப்பட்டது.

முக்கியமாக லயன்ஸ் கழகங்களால் நடாத்தப்படும் நீரிழிவு சம்பந்தமான சகல மருத்துவ முகாம்களும் அந்தந்த நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைவாக இருக்க வேண்டுமெனவும்கட்டாயமாக சுகாதார பராமரிப்பு சார்ந்தவர்களின் கண்காணிப்புடனும் நடாத்தப்பட வேண்டுமெனவும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

இவற்றிற்கு மேலாக, சர்வதேச லயன்ஸ் கழகமானது அமெரிக்காவிலுள்ள " Diabetes Education & Camping Association " என்கின்ற அமைப்புடன் இணைந்து நீரிழிவு சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் உதவிகளையும் செய்து வருகின்றது.

சர்வதேச லயன்ஸ் கழகங்கள்- மாவட்டம் 306 B1இன் தற்போதைய ஆளுனரான லயன். லக்ஸ்மன் விஜேசிங்க MJF அவர்கள் நடப்பு வருடத்திற்குரிய தன்னுடைய ஐந்து அம்ச செயற்றிட்டத்தில் நீரிழிவு விழிப் புணர்வினையும்முக்கியமான செயற்றிட்டமாகக் கொண்டுள்ளார். இதற் கமைவாக, சகல லயன்ஸ் கழகங்களும் உலக நீரிழிவு தினத்தில் பல விதமான சேவைத்திட்டங்களை மேற்கொள்ளும்.

### பாகற்காயின் மகிமை



சித்த மருத் துவத்துறையில் நீரிழிவு நோயினைக் குணப்படுத்தும் தன்மை நாம் வழமையாகக் கறியில் சேர்க்கும் பாகற்காயில் பெருமளவில் காணப்படுகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, பாகற்காயில் கைபோகிளி செமிக் (Hypoglycemic) அல்லது தாவர இன்சு லின் எனப் படும் பதார்த்தம் காணப் படுவதாகவும், இது சலத்திலும் மற் றும் இரத் தத்திலும் சீனி அளவினைக் குறைக் கும் நன் மையினைக் கொண்டதாக இருக்கின்றது.



ஆகவே, நீரிழிவு நோய் காணப்படுபவர்கள் தங்களுடைய நாளாந்த உணவில் பாகற்காயினைச் சேர்த்துக்கொள்ளலாம். பாகற்காயினை பிழிந்து சாறாக காலை வேளையில் வெறும் வயிற்றில் அருந்தலாம்.பாகற்காயின் விதைகளையும் பொடி செய்து உணவுடன் கலந்தும் சாப்பிடலாம். அநேகமான நீரிழிவு நோயாளர்கள் வழமையாகக்குறைவாகச் சாப்பிடுவதால் சத்துக் குறைவுள்ளவர்களாகக் காணப்படுவர்.

**லயன் செ.ஞானராஜா**
மாவட்ட இணைப்பாளர்
சர்வதேச லயன்ஸ் கழகங்கள் -மாவட்டம் 306B1

பாகற்காய், A,B1,B2,C என்கின்ற விற்றமின் வகைகளையும் இரும்புச் சத்தை யும் கொண்டுள்ளது.இவ்வாறான மருத்துவ குணங்களைக் கொண்ட பாகற்கா யினை நீரிழிவு நோயாளர்கள் தங்களுடைய நோயின் தாக்கத்திற்கமைவாக ஒரு சித்த மருத்துவரின் ஆலோசனையின்படி மேற் கொண்டால் நீரிழிவு நோயினைக் கட்டுப் படுத்த முடியும்.




இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி சலரோகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் " சிறுகுறிஞ்சா" நாற்றுக்கள் வழங்கும் வைபவத்தில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தலைவர் பயனாளி ஒருவருக்கு சிறுகுறிஞ்சா நாற்றுக்கள் வழங்குவதையும் அருகில் பிராந்தியத்தலைவர்,வலயத் தலைவர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 04.03.2009 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும், 04.09.2008 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை | |
| யாழ்.2ம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை |
| காரைநகர் | யாழ்ப்பாணம் |
| சுன்னாகம் | 2009டிசம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),
உதவிப் பொது முகாமையாளர்
காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 222 3126
021 222 2735

(C-3718)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புக்களும் வெள்ள அழிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும்

**வெள்ளப் பெருக்கின் முன்னரான நடவடிக்கைகள்**

வெள்ளப் பெருக்கின் முன்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**வெள்ளத் தடுப்புச் சுவர்களை அமைத்தல்**

கடனீரேரிகள், பெரிய வெள்ள வாய்க்கால்களில் மழைக்காலங்களின் போது நிரம்புகின்ற மேலதிக நீர் குடியிருப்புக்களுக்குச் சென்று பாதிப்பினை ஏற்படுத்தாத வண்ணம், தடுப்புச் சுவர்கள், அணைகள் என்பவற்றினை அமைத்தல் வேண்டும்.

இதன் மூலம், அதிக மழைக்காலங்களின் போது நீரேரிகளின் மேலதிக நீர், குடியிருப்புக்குள் சென்று பாதிப்பினை ஏற்படுத்துவதனைக் குறைக்க லாம்.

தகைய சந்தர்ப்பம் ஏற்படுவதன் மூலம் உருவாகும் ஆபத்துக்கள் பற்றி விழிப்புணர்வுடன் இருந்து வெள்ள அனர்த்த அபாயம் பற்றி விழிப்புடனிருத்தல் அவசியமாகும்.

**வடிகால்களைச் சீராக்குதல்**

யாழ்ப்பாண மாவட்டத்தின் வெள்ளம் ஏற்படக்கூடிய மாரி காலங்களுக்கு முன்னதாக குடாநாட்டிலுள்ள சிறிய, பெரிய வடி கால்களை துப்புரவு செய்து, வெள்ளம் வடிந்தோடும் வகையில் அவற்றைப் புனரமைப்பதுடன், தூர்ந்து போயுள்ள குளங்கள் குட்டைகளை தூர்வாரி அவற்றின் நீர்க் கொள்வனவை அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**தாவரங்களின் விதானங்களின் அளவைக் குறைத்தல்**

வெள்ளம் ஏற்படக்கூடிய காலங்களுக்கு

**2008 ஆம் ஆண்டு நிசாப்புயலின் போது பாதிக்கப்பட்ட வலிகாமம் பகுதிகளைக் காட்டும் புவியியல் தகவல் தொழில்நுட்பத்தில் அமைந்த படம்**




முன்பதாக தாவரங்களின் (குறிப்பாகப் பெரிய மரங்கள்) விதானங்களின் அளவைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் புவியியல் அமைப்பின் பிரகாரம் வங்காள விரிகுடாவில் ஏற்படும் அமுக்கக் குறைவே (தாழமுக்கம், புயல், சூறாவளி) வெள்ளப் பெருக்கு பிரதான காரணமாக இருப்பதனால் அக்காலத்தில் காற்றின் வேகம் மிக அதிகமாக இருக்கும். இதனால் தாவரங்களின் விதானம் அதிகமாக இருக்கும் போது அவை காற்றின் வேகத்தால் முறிந்தோ, அல்லது வேருடன் சாய்ந்தோ விழுந்து ஆபத்தினை ஏற்படுத்தும். எனவே தாவரங்களின் விதானங்களை (Canopy) குறைத்து அவை வீழ்வதைத் தடுக்கலாம்.

**வெள்ளப்பெருக்குக் காலங்களை அறிந்து கொள்ளல்.**


யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்குச் சாதகமான நிலைமைகளை அறிந்து கொள்ளல் வேண்டும். சூறாவளி, புயல், தாழமுக்கம் மற்றும் அதிக மழைக்காலங்களைப் பற்றி அறிந்து அத்

**வெள்ள அபாயப்படம் (Flood Hazard map) ஒன்றினை அமைத்தல்**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெள்ள அபாயப் படம் ஒன்றினை தயாரித்து, வெள்ள நீர் தேங்கக் கூடிய பகுதிகளையும் நீர் தேங்காத பகுதிகளையும் அடையாளப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். இதன் மூலம் வெள்ள அனர்த்தக் காலங்களின் போது மக்களை அனர்த்தப் பகுதியிலிருந்து பாதுகாப்பான பகுதிக்கு நகர்த்த முடியும். இதனை மட்டச் செயலாகவோ அல்லது வேறு நிறுவனங்களோ முன்னின்று செயற்படுத்தலாம்.


**திட்டமிட்ட கட்டுமானப் பணிகள்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் போருக்கு பின்னரான புனரமைப்பு வேலைகள் தீவிரம் பெற்றுள்ள்ன. ஆனால் இவற்றில் பல முறையான அனுமதியின்றியும் திட்டமிடப்படாமலும் அமைக்கப்படுகின்றன. பல நீர் வடிந்தோடும் தாழ்வான நிலங்களில் கட்டடங்களும், மதில்களும் அமைக்கப்படுகின்றது. இத்தகைய தடைகள் குறித்த பகுதியில் வெள்ளம் தேங்குவதற்கு உதவுகின்றன.



**நா. பிரதீபராஜா**
விரிவுரையாளர், புவியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**2008 ஆம் ஆண்டின் நிஷா புயலின் போதான வெள்ள அனர்த்தப் படம்**



எனவே இத்தகைய கட்டுமானங்களை மேற்கொள்ளும்போது வெள்ளம் வடிந்தோடுவதற்கான மாற்று வழிகளை அமைத்தல் வேண்டும்.

உதாரணமாக வீட்டு மதில்களை அமைக்கும் போது நீர் வடிந்தோடக் கூடிய பகுதியை அடையாளம் கண்டு அங்கு நீர் வழிந்தோடக்கூடிய துளை இட்டு மதில்களை அமைத்தல் வேண்டும்.

**குறுக்கு அணைகள் அமைத்தல்**

குடாநாட்டில் உப்பாறு, தொண்டைமானாறு, கடனீரேரிகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும் நீர் குடியிருப்புக்கு உட்புகும் பகுதிகளை அடையாளம் கண்டு அப்பகுதியில் குறுக்கு அணைகளை அமைத்தல் வேண்டும்.

இதனால் நீர் குடியிருப்புக்களுக்குள் உட்புகுவதைத் தடுக்கலாம். (தொடரும்)

## உயர் பொலிஸ் அதிகாரிகள் 20 பேருக்கு உடனடியாக இடமாற்ற உத்தரவு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் துறையின் முக்கிய அதிகாரிகளில் சிலருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

புதிய பொலிஸ்மா அதிபராக மஹிந்த பாலசூரிய பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முக்கிய பொறுப்புக்களில் இருந்த பொலிஸ் துறையின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்பது பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் 11 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்ற உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

## மாவடி வேம்பு நாகபூஷணி அம்மன் சிறுமியாகத் தோன்றிய அதிசயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி வேம்பு எனும் கிராமத்தில் நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

இக்கோவிலில் கடந்த 10 ஆம் திகதி மாலை 4 மணியளவில் ஓர் அதிசயம் இடம் பெற்றுள்ளது.

சிறுமியாக மனித உருவில் தோன்றிய நாகபூஷணி அம்பாள் ஏனைய சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடியதாகவும் பின்னர் பெரியோர் அவதானித்ததும் ஆலமரத்திற்கு கீழே சென்று நாகத்தின் உருவத்தில் சிலையாக மாறிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

பிற்பகல் 5 மணிவரையும் அச்சிலைக்கு இதயத்துடிப்பு இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அதன் வால்ப்பகுதி மரத்தில் உள்நுழைந்திருப்பதுடன் வெளியே தலைப்பகுதி மாத்திரம் காணப்படுகின்றது.

அன்றிலிருந்து பலர் புதிதாகத் தோன்றிய இந்தச் சிலையை பார்வையிட்டு வருகின்றார்கள். (ச-எ)

## யோகபுரம் துணுக்காய் பகுதிகளில் அஞ்சல் சேவைகள் ஆரம்பம்

### வட மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவினுள் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு சேவையாற்றுவதற்காக யோகபுரம், துணுக்காய் ஆகிய இரு இடங்களில் அஞ்சல் நிலையங்கள் திறக்கப்பட்டு அஞ்சல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் வீ. குமரகுரு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து பாடசாலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உப அஞ்சல் அலுவலகங்கள் என்பன துணுக்காய் பிரதேசத்தில் செயற்படத் தொடங்கியிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச அஞ்சல் சேவை குறித்து வட மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ. குமரகுரு மேலும் தெரிவித்ததாவது, யோகபுரத்தில் ஒரு தனியார் வீட்டிலும் துணுக்காயில் ஒரு தனியார் வீட்டிலும் முத்திரைகள் விற்பனை கடிதங்களைப் பெறுவது உள்ளிட்ட அஞ்சல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சேவையை மேற்பார்வை செய்வதற்காக அதிகாரிகள் வவுனியாவில் இருந்து அங்கு தினசரி சென்று வருகின்றார்கள்.

அங்கு சேகரிக்கப்படும் கடிதங்கள் கொண்டு வரப்பட்டு வவுனியாவில் இருந்து வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதே போன்று வெளியிடங்களில் இருந்து அந்தப் பிரதேசத்தில் உள்ள மக் களுக்கு வருகின்ற கடிதங்கள் வவுனியாவில் இருந்து அங்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் போலவே கிளிநொச்சி மாவட்டத்திலும் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றார்கள்.

எனவே இந்தப் பகுதியிலும் அஞ்சல் அலுவலகங்களைத் திறந்து அஞ்சல் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகின்றோம் என்றார். (ஓ-6)

சாதாரணமாக ஒருவரைக் கொன்றால் அது கொலைக் குற்றமாகிறது. ஆனால் போர்களத்தில் ஆயிரக்கணக் கானவர்களை கொன்று குவிப்பது வீரம் என்று போற் றப்படுகிறது.

– தாக்கரே

வலம்புரி

# வார்த்தை தவறிவிட்டால் கண்ணம்மா நாடு குழம்புமடி...

இராணுவத் தலைமைத்துவம் நாட்டுக்கு அவ சியமில்லை. இவ்வாறு ஊடகத்துறை அமைச் சர் பிரியதர்சன யாப்பா கூறியுள்ளார்.

அமைச்சர் யாப்பாவின் கருத்து எதை குறித்து நிற்கிறது என்பது புரியாத புதிராக உள்ளது. யாப் பாவின் கருத்துக்கு பொருள்கொண்டால் புரட்சி மூலம் ஏற்படும் இராணுவத்தலைமை என்பதை குறித்து நிற்பதாகவே கருதவேண்டும். ஆனால் இராணுவப் புரட்சிக்கான சாத்தியங்கள் எதுவுமே இல்லை.

அப்படியானால் இராணுவத்தலைமை என்று யாப்பா கூறுவது எதையென்று ஆழமாக ஆராய்ந் தால், ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை அடிபடையாகக் கொண்டு கூறப்பட்டதாக கொள்ளவேண்டும்.

இங்குதான் அமைச்சர் யாப்பா ஜனநாயகத் தைப் பரிசோதிக்கின்றார்.

அதாவது ஜெனரல் சரத் பொன்சேகா இராணு வத் தளபதியாக இருந்தவர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முப்படைகளின் தலைமை அதி காரியாகவும் நியமிக்கப்பட்டவர். இப்போது அவர் எல்லாப் பதவிகளையும் இழந்தும், துறந்தும் விட்டார்.

அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால்–அவருக்கு மக்கள் அதிகமாக வாக்களித்தால் அவர் ஜனாதிபதியானால் என்ற வரிசைக்கிரமத்தில் 'இராணுவத் தலைமைத்து வம் நாட்டுக்குத் தேவையில்லை' என அமைச் சர் யாப்பா கூறியிருக்கலாம்.

இங்குதான் யாப்பாவின் வார்த்தை தவறிப் போகிறது.

அதாவது ஜனாதிபதித் தேர்தல் என்று ஒன்றை அறிவித்து அதில் வேட்பாளர்களை அங்கீகரித்து ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தி மக்கள் வாக் களித்து இறுதிமுடிபு அறிவிக்கும் போது, யார் வெற்றிகொள்கிறார்களோ! அவர் ஜனாதிபதி யாக பதவியேற்றுக்கொள்வார்.

இந்த வரிசைக்கிரமத்தில் ஜனாதிபதி தெரிவு இடம்பெறும்போது அவரவர் வகித்த பதவிகள் ஆட்சிக்கு வருவதாகக் கூறமுடியாது.

ஆக, அமைச்சர் யாப்பா இராணுவத்தலை மைத்துவம் நாட்டுக்குத் தேவையில்லை எனக் கூறியது குழப்பத்தை ஏற்படுத்தவே செய்யும்.

எதுவாயினும் வார்த்தைகள் மிகவும் கவன மானவை. அவை தவறி விடப்படும் போது விளை வுகள் பாரதூரமாக இருக்கும்.

இந்த நாட்டில் தமிழர்கள் வாழலாம், ஆனால் உரிமை கேட்க முடியாது என்று இராணுவத் தள பதியாக இருந்த முடுக்கில் சரத் பொன்சேகா கூறி யதும்,

நானே! யுத்தத்திற்கு உத்தரவிட்டேன் என பகி ரங்கமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்த தும் தேர்தல் காலத்தில் சிக்கலைத் தரக் கூடிய வார்த்தைகள்.

இதனை நிராகரிப்பதற்காக பல உறுதி மொழி களை அவர்கள் முன்வைக்க வேண்டியிருக்கும்.

இதற்குமேலாக இப்போதுயாப்பாவின் 'இராணு வத் தலைமை' பற்றிய கருத்தும் தேர்தல் கூட் டங்களில் தூள் பறக்கும் இடத்தைப்பிடித்துள் ளது.

# திறந்த பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படும்-ஐ.தே.முன்னணி

(கொழும்பு)

திறந்த பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப் படும் என ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்துள்ளது. சமூ கப் பொறுப்புடைய ஓர் சந்தை முறைமையை உருவாக்கு வதன் மூலம் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் இவ்வாறான பொருளாதாரக் கொள்கை களே தற்போது நடைமுறையில் இருப்பதாக அவர் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடிக்கு சமூகப் பொறுப்புடைய சந்தை முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதனைத் தவிர வேறும் வழியில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மிகவும் வறிய மக்களுக்கு நன்மைகள் சென்றடையக் கூடிய வகையிலான ஓர் நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைத்தால் 180 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட்டு தேசியப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீனமான நீதிமன்றக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை நீடித்துக்கொள்ள யதார்த்தமான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை

## தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜீ.எஸ்பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை நீடித்துக் கொள்ள அரசாங்கம் யதார்த்த பூர்வமான முனைப்புக்களை மேற்கொள்வதில்லை என ஆடைக் கைத்தொழில் தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

அரசாங்கம் மதத் தலைவர்கள் மற்றும் ஆடைக் கைத் தொழில் உரிமையாளர்கள் ஆகியோர் இந்தச் சலுகைத் திட்டத்தை தக்க வைத்துக்கொள்ள அதிக நாட்டம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் கோரப்பட்டுள்ள விசாரணை களுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டு மென குறிப்பிடப்படுகிறது.

ஏனைய நாடுகளைப் போன்றே சலுகைத் திட்டத்தை நீடித்துக் கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய விசாரணைக் குழுவை அனுமதிப்பதில் தவறவில்லை என தொழிற்சங்கங் கள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறைகளுக்கு உரிய மரி யாதை வழங்காது வெறுமனே சலுகைத் திட்டத்தை நீடிக்கு மாறு கோருவதில் எவ்வித அர்த்தமுமில்லை என தொழிற் சங் கத்தின் செயலாளர் பாலித அத்துகோரல தெரிவித்துள்ளார்.

புதிய சந்தை வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை அரசாங்கத்தின் நம்பிக்கை யதார்த் திற்கு புறம்பானதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

## இந்தோனேசிய கப்பலில் உள்ள

# 260 இலங்கையர்களையும் திருப்பி அனுப்புமாறு இலங்கை அரசு கோரிக்கை

(கொழும்பு)

இந்தோனேசிய கடற்பரப்பில் தஞ்சமடைந்துள்ள இலங் கையர்கள் 260 பேரையும் திருப்பி அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம் அவுஸ்திரேலியாவிடம் கோரி யுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்கும் நோக்கில் குறித்த படகுப் பயணிகள் முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் தற்போது இவர்கள் இந்தோனே ஷிய எல்லைப்புறத்தில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இவ்வாறு தஞ்சமடைந்துள்ளவர்கள் உண்மையில் அரசி யல் அனாதைகள் அல்ல எனவும் அவர்களுக்கு அடைக்கலம் வழங்க வேண்டிய அவசியமில்லை எனவும் அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அரசியல் தஞ்சம் கோருவதாக தெரிவித்த போதிலும் குறித்த நபர்கள் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு நேரடியாக செல்லவில்லை எனவும் இந்தியாவிற்கு சென்று அங்கிருந்து அவுஸ்திரேலியா சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்டவிரோத குடியேற்றக் கும்பலில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும் ஊடுருவியிருப்பதாகவும் அவர்களை இலங்கையிடம் ஒப்படைக்குமாறும் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஓ-6)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் வெடி பொருட்கள் மீட்பு

புதுகுடியிருப்புப் பகுதியில் சுமார் இரண்டாயிரம் கிலோ கிராம் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. வெற்று எரிபொருள் தாங்கி ஒன்றினுள் மிகவும் நுட்ப மான முறையில் வெடி பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டி ருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட தன் பின்னர் மீட்கப் பட்ட அதிகளவான வெடி பொருள் தொகுதி இதுவெனத் தெரி விக்கப்படுகிறது. வவுனியாவிலிருந்து சென்ற விசேட பொலிஸ் பிரிவினரால் குறித்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் ஆறு அடி ஆழத்தில் இந்த எரிபொருள் தாங்கி புதைக் கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. வன்னி இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்ற காலத்தில் இந்தவெடி பொருட்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

# மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



உலக இயந்திரத்தின் சக்கரங்களிலிருந்து தப்பி ஓடாதே. மாறாக, அதன் உள்ளேயே நின்று கொண்டு, கர்மயோகத்தின் இரகசியத்தைக் கற்றுக் கொள். இயந்திரத்தின் உள்ளே இருந்து. சரியான படி வேலை செய்வதன் மூலமும் அதிலிருந்து வெளியே வந்து விடுவது சாத்தியமே.

நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத் தன்மையை அடைகிறது. பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சும சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்கு உரிய பலன்களைத் தருகிறது. இந்தப் பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

# மணிக்கு ரூ.65 ஆயிரம் சம்பாதிக்கும் 10 வயதுச் சிறுவன்

மலேசியாவைச் சேர்ந்த சிறுவன் அதி புத்ரா அப்துல் கனி. இவனுக்கு 10 வயது தான் ஆகிறது. 2 கம்பனிகளுக்கு தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டு இருக்கிறான். விற்றமின் மாத்திரைகள் தயாரிக்கும் 2 கம்பனிகளை அவன் தாயார் நடத்தி வருகின்றார். இந்தக் கம்பெனிகளுக்கு அவனை தலைமை அதிகாரியாக அவன் தாயார் நியமித்திருக்கிறார்.

கௌரவத்துக்காக அவன் இந்தப் பதவியில் நியமிக்கப்படவில்லை திறமை காரணமாக தான் அவன் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். தொழில்துறையில் அவன் பல நுணுக்கங்களை அறிந்தவனாக இருக்கிறான். அவனது திறமையை அவன் தாயார் மட்டும் அறிந்திருக்கவில்லை. மற்றவர்களும் அவன் திறமையை மதித்தனர்.

பல பல்கலைக்கழகங்கள் அவனை தங்கள் மாணவர்களுக்கு சிறப்புரை நிகழ்த்துவதற்காக அழைத்தன. இதற்காக அவனுக்கு ஒரு மணி நேரத்துக்கு 65 ஆயிரம் ரூபாய் சன்மானம் அளித்து வருகின்றன. (ஓ-6)

# பிரான்ஸிடம் வாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் சர்தாரிக்கு கோடிக்கணக்கில் இலஞ்சம்


## பிரான்ஸ் பத்திரிகை தகவல்

(பாரீஸ்)

பிரான்ஸிடமிருந்து 3 நீர் மூழ்கி கப்பல்களை பாகிஸ்தானுக்கு வாங்கியதில் அதிபர் சர்தாரிக்கு கோடிக் கணக்கில் இலஞ்சம் வழங்கப்பட்டதாக பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு சர்தாரியின் மனைவி பெனாசிர் பிரதமராக இருந்தபோது கடற்படைக்கு அகோஸ்டா - 90 என்ற 3 நீர்மூழ்கி கப்பல்கள் பிரான்ஸிடம் இருந்து மொத்தம் 6 ஆயிரத்து 150 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டன. இதற்காக சர்தாரிக்கு இலஞ்சமாக ரூ. 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்தத் தகவலை பிரான்ஸ் நாட்டு பத்திரிகையான லிபரேசன் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒப்புக் கொண்டபடி இலஞ்சத் தொகை முழுவதும் சர்தாரிக்கு கொடுக்கப்படாததால் தான் 2002 ஆம் ஆண்டு கர்ராச்சி நகரில் நடந்த தீவிரவாத தாக்குதலில் 11 பிரான்ஸ் நாட்டவர்கள் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது என்றும் அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



இந்த செய்திக்கு பாகிஸ்தானில் அரசாங்க செய்தி தொடர்பாளர் கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறார். அவர் மேலும் கூறியதாவது,

நீர் மூழ்கிக் கப்பல்கள் முறைப்படி தான் வாங்கப்பட்டன. இராணுவ அமைச்சரகத்தின் மேற்பார்வையின் கீழ் முறைப்படி பல்வேறு கம்பெனிகளிடம் இருந்து விலைப்புள்ளி கேட்டு தான் வாங்கப்பட்டது.

நீர் மூழ்கிக் கப்பல்கள் வாங்கப்பட்டபோது சர்தாரி ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ இராணுவ மந்திரியாகவோ இல்லை. இந்த நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கு பொறுப்பாக இருந்த அட்மிரல்லை. தணிக்கைக்குழு விசாரித்தது. அப்போது எந்த தவறும் நடக்கவில்லை என்று நிரூபணம் ஆனது என்றார். (ஓ-6)

# புலம்பெயர் 2.5 கோடி மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தகவல்

(ஜெனீவா)

அனைத்து நாடுகளிலும் புலம் பெயர்ந்த மக்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இவ்விதம் புலம்பெயர்ந்த மக்களை உள்ளூர் மக்கள் அகதிகளாகக் கருதுவதால் முகாம்களில் இல்லாத போதிலும் அவர்களைப் புறக்கணிப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. புலம் பெயர்ந்த மக்களின் நிலைமை குறித்த அறிக்கையை வெளியிட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜேகப் கெலென்பெர்கெர் கூறியதாவது,

அகதி முகாம்களில் பெரும்பாலும் புலம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்படுகின்றனர். ஆனால் இவர்கள் அந்த இன மக்களாலேயே புறக்கணிக்கப்படுகின்றனர்.

உள்நாட்டில் ஏற்பட்ட போர் உள்ளிட்ட காரணங்களுக்காக 15 சதவீதம் பேர் புலம் பெயர்ந்துள்ளனர். இவ்விதம் புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினாலும் அவர்கள் தங்களது சொந்த நாட்டை விட்டு வெளியேறவில்லை. இவர்கள் அனைவரும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் அனைத்தும் உதவி முகாம்களில் நிவாரணக் குழுக்கள் மூலமும், உள்ளூர் அதிகாரிகள் மூலமும் நிறைவேற்றப்படுகிறது. அதே சமயம் உள்ளூரில் தங்கள் உறவினர்கள் அல்லது அப்பகுதி மக்களில் தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு உதவிகள் எளிதாகக் கிடைக்கிறது.

ஆனால் இவ்விதம் புலம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. குறிப்பாக காங்கோ அல்லது பாகிஸ்தான் ஆகிய பகுதிகளில் இவ்விதம் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகம் என்று கெலன்பெர்கெர் தெரிவித்தார்.

அகதிகள் முகாம்களில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் உதவிகள் கிடைக்கும் என்பது தவறானது என்றும் அவர் குறிப்பிட்டார். தற்போது வெளியான அறிக்கை மூலம் புலம்பெயர்ந்த மக்களுக்கு எந்தெந்த அளவில் உதவி தேவை என்பதை மற்றவர்களும் அறிந்து கொள்ளமுடியும். (ஓ-6)

# நேபாளப் பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்ட மாவோயிஸ்டுகள்

(காத்மாண்டு)



நேபாளப்பிரதமர் அலுவலகம், அமைச்சகங்கள், துறை அலுவலகங்கள் செயல்படும் சிங்க தர்பார் பகுதியை ஆயிரக்கணக்கான மாவோயிஸ்டுகள் செங்கொடி ஏந்தியபடி வியாழக்கிழமை முற்றுகையிட்டனர். மாவோயிஸ்டு கட்சித் தலைவர் புஷ்பகமல் பிரசந்தா, உயர்தலைவர்கள் மோகன் வைத்யா கிரண், உள்ளிட்டோர் இந்த முற்றுகைப் போராட்டத்துக்கு தலைமை வகித்தனர். பிரதமர் மாதவகுமார் நேபாள தலைமையிலான கூட்டணி அரசு விலகவேண்டும். அதுவரை எங்கள் போராட்டம் ஓயாது. உண்மையான மக்களாட்சி அமைய வேண்டும். அதுதான் எங்கள் இலட்சியம். வெள்ளிக்கிழமை வரை போராட்டம் தொடரும். அதற்காக 3 இலட்சத்துக்கும் அதிகமான எண்ணிக்கையில் மக்களைத் திரட்டி முற்றுகையைத் தீவிரப்படுத்துவோம் என்றார் பிரசந்தா. அலுவலகம் செல்ல வந்த அதிகாரிகளை போராட்டக்காரர்கள் நுழையவிடாமல் தடுத்தனர். (ஓ-6)

# கிறீன்லாந்தின் பனிப்பாறைகள் துரித கதியில் உருகி வருகின்றன

கிறீன்லாந்தின் பனிப்பாறைகள் துரித கதியில் உருகி வருவதாக சுற்றாடல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த ஆண்டுகளைப் போன்று இல்லாது இம்முறை அதிகளவு பனிப்பாறைகள் உருகி வருவதாகவும், இதனால் கடல்மட்டம் உயர்வடைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

செய்மதி மற்றும் பனிக்கட்டிகளைக் கொண்டு நடாத்தப்பட்ட சோதனையின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. கிறீன்லாந்தில் வருடாந்தம் சுமார் இரண்டு இலட்சத்து 73 ஆயிரம் தொன்பனிக்கட்டி உருகி கடலு டன் கலப்பதாகவும், இது ஓர் ஆபத்தான நிலை எனவும் குறிப்பிடப்படுகிறது. ப்னிக் கட்டிகள் உருகுவதனால் நாளுக்குநாள் கடல்மட்டம் உயர்வடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2000 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பனிக்கட்டி உருகும் அளவு அதிகரித்துள்ளதாகவும், இதனால் கடல்மட்டம் உயர்வடைவதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வருடாந்தம் மூன்று மில்லிமீற்றர் அளவில் உலகக் கடல் மட்டம் உயர்வடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிறீன்லாந்தைச்சேர்ந்த பல பனிப்பாறைகள் துரித கதியில் உருகிவருகின்றமை அண்மைய செய்மதி ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சுற்றாடலை பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனஆய்வாளர்கள் கோரியுள்ளனர். (ஓ-6)




# நெல்சன் மண்டேலாவின் பிறந்ததினத்தை மண்டேலா சர்வதேச தினமாக ஐ.நா.அறிவிப்பு

(நியூயோர்க்)

தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா பிறந்த தினமான ஜூலை 18 ஆம்திகதியை நெல்சன் மண்டேலா சர்வதேச தினமாக ஐ.நா. சபை அறிவித்தது. இதற்காக ஐ.நா.பொதுச்சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் இனங்களுக்கு இடையே நல்உறவு ஏற்படவும், மனித உரிமைகளை மேம்படுத்தவும் ஆண் -பெண் சமம் என்ற நிலை ஏற்படவும் மண்டேலா பாடுபட்டார் என்றும், அவர் உழைப்பை நினைவு கூறும் வகையில் அவர் பிறந்த தினத்தை மண்டேலா சர்வதேச தினமாக கடைப்பிடிப்பது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிக்க அது நிறைவேற்றப்பட்டது. 2010 ஆம் ஆண்டு முதல் ஜூலை மாதம்18 ஆம் திகதி மண்டேலா சர்வதேச தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அப்போது அவருக்கு வயது 92 ஆவது பிறந்த தினமாகும். (ஓ-6)

# உலகம் முழுவதும் 20 கோடி குழந்தைகள் பசிபட்டினியால் வாடுகின்றனர்

## ஐ.நா.அறிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நல நிதியகம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் உலகம் முழுவதும் 20கோடி குழந்தைகள் பசி மற்றும் பட்டினியால் வாடுகின்றனர். இவர்களுக்கு போதிய சத்துணவு மற்றும் மருத்துவ வசதி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் ஏழை நாடுகளில் வசிக்கும் 5 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகள். இவர்களில் 90 சதவீதம் பேர் ஆபிரிக்கா மற்றும் ஆசியா கண்டத்தில் உள்ள நாடுகளில் உள்ளனர்.

ஆசியாக் கண்டத்தில் 40 சதவீதமாக இருந்த பட்டினி சதவீதம் தற்போது 30 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆனால் ஆபிரிக்காவில் 34 சதவீதமே குறைந்துள்ளது.

தெற்கு ஆசியாவில் ஆப்கானிஸ்தான், நேபாளம், இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தீவிரவாதம், வன்முறை போன்றவற்றால், வறுமையால் வாடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அங்கு 8 கோடியே 30 இலட்சம் குழந்தைகள் பசியால் வாடுகின்றனர் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

# வெளிநாட்டு டாக்டர்கள் இங்கிலாந்தில் குடியேறுவது தடுக்கப்படும்

## பிரதமர் கோர்டன் பிரவுண் அறிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்துக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு வெளியே இருந்து டாக்டர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் குடியேறுவதைத் தடுப்போம் என்று பிரதமர் கோர்டன் பிறவுண் அறிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து குடியேறுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார். உள்நாட்டு டாக்டர்களுக்கே வேலை கிடைக்காமல் தவிப்பதால் எழுந்துள்ள சர்ச்சையையும் பிரதமரை கவலை அடையச் செய்துள்ளது. தொடர்ந்து அதிகரித்து வரும் குடியேற் றத்தால், தங்கள் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு குறைவதாகவும், சம்பளம் குறைவதாகவும் மக்கள் கவலைப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அத்துடன் தங்கள் குடும்பத்துக்கு வசதியான வீடு கிடைக்குமா என்றும் மக்கள் கவலைப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# தமிழ் அரசியல் கைதிகள் தாக்குதலில் படுகாயம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நேற்று இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தி னால் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் காயமடைந் துள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் பல தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக விசாரணை ஏதும் இன்றி தடுத்து வைக்கப்பட் டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அவர்கள் தமது விசாரணைக்காகவும் விடுதலைக்காகவும் உண்ணாவிரதம் உட்பட பல்வேறு போராட்டங் களை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இப்படியான சூழ்நிலையில் நேற்று தமிழ்க் கைதிகள் சிலர் சிறைச்சாலை அதிகாரிகளி னாலும் சிங்களக் கைதிகளினாலும் தாக்குத லுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பில் சுயாதீன தகவல்கள் ஏதும் இதுவரையில் வெளியிடப்படவில் லை. இந்தச் சம்பவம் எதற்காக நடந்தது. இதன் பின்னணி என்ன என்பன இதுவரை யில் தெரியாத நிலையில் தமிழ் மக்களிடை யே ஓர் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.(ச-3,5)

# தகைமைகாண் பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவை யின் சிவில்/படவரைஞர் பதவிகளின் பயிலு நர் தரங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வர்களை இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் சிவில்/படவரைஞர் வகுப்பு- II பிரிவு ஆ பதவிகளுக்கு நியமனம் வழங்கு வதற்காக இன்று நடைபெறவிருந்த தகை மைகாண் பரீட்சை தவிர்க்க முடியாத கார ணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி அதே பரீட்சை நிலையத்தில் நடைபெறும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறியத் தந்துள் ளார். (ச)

## அழகியற் போட்டி

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அழகி யற் போட்டி நல்லூர் சி.சி.த.க. பாடசாலை யில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் அறிவித்துள்ளார். (ஓ-7,14)


## ஓடுகள் விற்பனைக்கு

3000 கொழும்பு வளையல் ஓடுகள் (இந்தியன் தயாரிப்பு) விற்பனைக்குண்டு.அஸ்பெஸ்போஸ் கூரைக்கு மேலே அடுக்கினால் குளிர்மைக்கு உகந்தது.

தொடர்பு: S. பாலேந்திரன்
இல.90,ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(3924)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## 2010ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடை கள், கோழிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2010.01.01 தொடக்கம் 2010. 12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 2009.11.26 பி.ப. 1.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :- 2009.11.27 நண்பகல் 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :- 2009.11.27 பி.ப. 2.00 மணி

### அட்டவணை

| இல. | சந்தைகள் (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள், கோழிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற்வரி தவிர) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|---|---|
| | **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 10000.00 | 880000.00 | - |
| 2 | மானிப்பாய் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 219000.00 | 400.00 |
| 3 | மானிப்பாய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 41000.00 | 300.00 |
| 4 | மானிப்பாய் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 110000.00 | - |
| | **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1 | காக்கைதீவு பொதுச் சந்தை | 500.00 | 1500.00 | 24000.00 | - |
| 2 | நவாலி பிரசாத்சந்தை | 1000.00 | 5000.00 | 107800.00 | - |
| 3 | சாவற்கட்டு சந்தை | 1000.00 | 5000.00 | 126600.00 | - |
| 4 | சண்டிலிப்பாய் சந்தை | 500.00 | 1500.00 | 27500.00 | - |
| 5 | நவாலி பிரசாத்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 81500.00 | 400.00 |
| 6 | நவாலி பிரசாத்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 30000.00 | 300.00 |
| 7 | ஆனைக்கோட்டை பிரசாத்சந்தை கோழிஇறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 11000.00 | - |
| 8 | ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 196500.00 | - |
| 9 | ஆனைக்கோட்டைச்சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 48200.00 | - |
| | **பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மரக்கறி | 1000.00 | 5000.00 | 125000.00 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மீன்சந்தை | 1000.00 | 10000.00 | 350000.00 | - |
| 3 | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 1500.00 | 10000.00 | - |
| 4 | பண்டத்தரிப்புச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 35000.00 | 600.00 |
| 5 | பண்டத்தரிப்புச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 15000.00 | 600.00 |
| 6 | பண்டத்தரிப்புச் சந்தை கருவாட்டுக் கடை இல.01 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| 7 | பண்டத்தரிப்புச் சந்தை கருவாட்டுக் கடை இல.02 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| | **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1 | மாசியப்பிட்டி சந்தை | 500.00 | 2000.00 | 85000.00 | - |
| 2 | இளவாலைச் சந்தை | 1000.00 | 5000.00 | 100000.00 | - |
| 3 | மாதகல் சந்தை | 500.00 | 2000.00 | 85000.00 | - |
| 4 | மாசியப்பிட்டிச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 38000.00 | 250.00 |
| 5 | மாசியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |
| 6 | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 13000.00 | 250.00 |
| 7 | மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |
| 8 | இளவாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 80000.00 | - |

01. கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி உட்பட இரு பிரதிக ளை **'செயலாளர், வலி.தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்'** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டை யையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதி விடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்தி ரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள் விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி, நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

05. இறைச்சிக்கடைகளுக்கு மாதாந்த வாடகைச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறு மதி சேர் வரி செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி நிபந்தனைகள் ,அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

08. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2009.12.10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மிகுதி 2/3 பகுதி 8 தவணையில் செலுத்தப்படல் வேண்டும். (அதாவது 2010 ஆகஸ்ட் 30 ஆம் திகதி முன்னர்).

09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுக மளிக்கலாம்.

10. மானிப்பாய் பட்டினம் பொதுச் சந்தை, பண்டத்தரிப்பு பட்டினம் பொதுச் சந்தை என்பவற் றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பின் ஏதாவது ஒரு வங்கி யில் தங்கள் பெயரில் முறையே ரூபா 150000 ற்கும் ரூபா 75000 ற்கும் குறையாது வைப் பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்திலும் உப அலுவல கங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(C-3719)

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம்,**
**மானிப்பாய். 12.11.2009.**

**திருமதி பு.சிவலிங்கம்**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**

## உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு

மானிப்பாய் கோவிற்பற்று -உரும்பிராய் லயன்ஸ் கழகங்கள்
நடாத்தும் இலவச நீரிழிவு மருத்துவ முகாம்.

இடம்:- சோதி வேம்படி வித்தியாலயம்-மானிப்பாய்
திகதி:- 14-11-2009 சனிக்கிழமை
நேரம்:- காலை 9.00 மணி முதல் மதியம் 12 வரை

*யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் கலந்துகொள்ளும் இம் முகாமில் கலந்து கொண்டு உங்கள் சலம் மற்றும் இரத்தத்தினை இல வசமாகப் பரிசோதித்து நீரிழிவு நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். பொதுமக்களை காலை உணவு மற்றும் தேநீர் எடுக்காமல் பரிசோதனைக்கு வருமாறு அழைக்கின்றோம்.*

லயன் இ.இராஜசூரி - தலைவர்
மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகம்

லயன் N.சுந்தரம் - தலைவர்
உரும்பிராய் லயன்ஸ் கழகம்

சேவை இணைப்பாளர்கள்

லயன் செ.ஞானராஜா
மாவட்ட இணைப்பாளர்

லயன் K.சண்முகநாதன்
வலயத் தலைவர் - வலயம் 20

(3925)

## வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல் - 2009

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக்கடைகளினை 2010 ஆம் ஆண்டுக்குக் குத்த கைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 16.11.2009 - 23.11.2009 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :-24.11.2009 பிற்பகல் 1.00 மணிவரை
கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :-24.11.2009 பிற்பகல் 2 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **செயலாளர், வலி கிழக் குப் பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்** எனும் முகவரிக்கும் இணைப் பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 23.11.2009 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

| இல. விபரம் | கேள்விப் பத்திரப் பணம் (வற் நீங்கலாக) | மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 1. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 1200000.00 |
| 2. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 150000.00 |
| 3. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 40000.00 |
| 4. அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 20000.00 |
| 5. அச்சுவேலி சந்தை சுற்றாடல் வாகன நிலையம் | 250.00 | 500.00 | 50000.00 |
| 6. வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 20000.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 1. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 60000.00 |
| 2. புத்தூர் பொதுச் சந்தை | 250.00 | 500.00 | 75000.00 |
| 3. புத்தூர் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 7250.00 |
| 4. ஆவரங்கால் பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 13000.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 1. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 30000.00 |
| 2. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 10000.00 |
| 3. நீர்வேலி பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 8000.00 |
| 4. நீர்வேலி மீன் சந்தை | 100.00 | 250.00 | 5000.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 1. கோப்பாய் வடக்குப் பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 15000.00 |
| 2. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 75000.00 |
| 3. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 3000.00 |
| 4. இருபாலைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 90000.00 |
| 5. இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 3000.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 1. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 85000.00 |
| 2. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 45000.00 |
| 3. உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 35000.00 |
| 4. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 30000.00 |
| 5. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 45000.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீ.சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

02. கேள்விப் பத்திரங்களை பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்க ளின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் உப அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

03. கேள்விப் பத்திரப் பணம், சித்தி பெற்ற கேள்வித் தொகை என்பவற்றுக்கு ஒப்பந்தம் எழுதும் போதுள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.

04. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத் தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலு வையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வலி கிழக்குப் பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம்,**
**புத்தூர். 13.11.2009.**

**தம்பையா நடராசா,**
**செயலாளர்.**

(C-3720)

# இலங்கையில் அரசியல் குழப்பம்...

இன்று டெல்லியிலிருந்து பகல் 11.30 மணியளவில் பிரணாப் முகர்ஜி சென்னை வருகிறார். பின்னர் 12.30 மணிக்கு விமானம் மூலம் கொழும்புக்கு புறப்பட்டுச் செல்கிறார். சென்னையில் அவர் முதல்வர் கருணாநிதியை சந்தித்துப் பேசலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் பெரும் குழப்பம் நிலவுவதாக சமீபத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தரர். மேலும் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நிறுத்த எதிர்க் கட்சிகள் முயன்று வருகின்றன.

இந்தப் பின்னணியில் பிரணாப் முகர்ஜியின் கொழும்புக்கு பயணம் அமைகிறது. தனது பயணத்தின் போது மகிந்த ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகம, எதிர்க் கட் சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை பிரணாப் முகர்ஜி சந்திப்பார். சரத் பொன்சேகாவையும் அவர் சந்திக்கக் கூடும் என்றும் ஒரு தகவல் கூறுகிறது. இதேவேளை ராஜபக்ஷ-சரத் பொன்சேகா இடையே சமரசம் ஏற்படுத்த பிரணாப் செல்வதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

ராஜபக்ஷ மீண்டும் வெல்ல வேண்டுமென இந்திய அரசு விரும்புவதாக தெரிகிறது. இதற்காகத்தான் சமீபத்தில் ரணில் விக்கிரமசிங்கவை காங்கிரஸ் கட்சி டெல்லிக்கு அழைத்து ராஜபக்ஷவுக்கு எதிராக தீவிரமாக செயல்பட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டதாக ஒரு தகவல் உள்ளது.

சரத் பொன்சேகா அதிபரானால் அது இந்தியாவுக்கு நல்லதாக இருக்காது. அவர் சீனா மற்றும் பாகிஸ்தானின் கைப்பாவையாக செயல் படுவார் என இந்தியாவுக்கு அச்சம் உள்ளது. இதனால்தான் சரத் பொன்சேகாவின் எழுச்சியை இந்தியா விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

இது தவிர சமீப காலமாக சீனா, பாகிஸ்தானுடன் படு தோழமையாக உள்ளது இலங்கை. இலங்கைக் கடற்படையுடன் சேர்ந்து சீனா வீரர்களும் தற்போது கச்சதீவு பகுதியில் நடமாடி வருவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இது குறித்தும் பிரணாப் முகர்ஜி இலங்கையுடன் பேசுவார் எனத் தெரிகிறது. அப்படியே தமிழர் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்தும் அவர் பேசக் கூடும் என்றும் தெரிகிறது. (ச-5)

# வவுனியாவிலிருந்து யாழ்...

பாணத்திலிருந்து இராணுவ அனுமதி பெற்று சென்றவர்கள் மட்டுமே வவுனியாவில் இருந்து ஏ-9 வீதியூடாக பஸ்களில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்ற நடை முறை இருந்துவந்தது.

அவ்வாறு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றவர்கள் மட்டுமல்லாமல் நாட்டின் எப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வருபவர்களும் வவுனியா ஈரப்பெரிய குளம் சோதனைச்சாவடியில் தமது அடையாள அட்டையின் போட்டோ பிரதி ஒன்றைக் கொடுத்து அங்கு இராணுவ அதிகாரியின் கையெழுத்து முத்திரை பதித்துக் கொண்டு பிரயாணம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதியநடைமுறை நேற்று வெள்ளிக் கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளதாக இ.போ.சவின் யாழ். பொது முகாமையாளர் எஸ்.கணேஷ பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வந் துள்ளதையடுத்து நேற்று 10 பஸ்களில் பயணிகள் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணமாகியதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து தென் பகுதிக்கு பயணம் செய்பவர்களுக் கும் இதே நடைமுறை பின்பற்றப்படும் என்றும் இ.போ.சவின் யாழ். பொதுமுகாமையாளர் கணேஷபிள்ளை தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்களும் இதே நடைமுறையை பின்பற்றலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பலாலி படைத்தலைமையகம் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டத்துக்கு செல்வதாயின் முன்னர் இருந்தது போன்று பாதுகாப்பு அனுமதி பெறவேண்டும் என கூறப்பட்டது. இவ்வாறான இரு வேறு கருத்துக்களால் மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. (ச-5)

# நாட்டுமக்...

அதிகரித்துள்ளன. எனினும் எமது மண்ணில் சமாதானமும் அபிவிருத்தியும் கொண்ட புதிய யுகத்தை எம்மால் உருவாக்க முடியும் என அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஜெனரல் சரத் பொன் சேகா ஜனாதிபதிக்கு எழுதிய இரகசியக்கடிதம் நாளை முழுமையாக பிரசுரமாகும் (ச-5)

# பேராதனை...

உந்துல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார். அரசாங்கம் கடந்தகாலம் முதல் மாணவர்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்துள்ளது. இதன் ஒரு கட்டமாகவே இந்த சம்பவம் இடம் பெற்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் உரிய தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுவரை எவ்வித தலையீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. கடத்தப்பட்டவர் தமிழ் மாணவியா, சிங்கள மாணவியா என்பது முக்கியத்துக்குரிய விடயமல்ல, சகோதர மாணவி என்ற நிலையில், அவரின் விடுதலைக்காக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குரல் கொடுக்கும் என அவர் கூறினார். (ச-5)

# பொன்சேகா...

கோரி ஜெனரல் சரத்பொன்சேகா ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக நேற்று முன்தினம் விண்ணப்பித்திருந்ததாகவும் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சரத்பொன்சேகா எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து தமக்கு ஓய்வைக் கோரியபோதும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி ஓய்வை ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-5)

# கனகரத்தினம்...

பெறவில்லை. என்றும் மேலும் அவரை விசாரணை செய்ய வேண்டியிருப்பதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து எதிர்வரும் 4 ஆம் திகதி மீண்டும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத் திற்கும் இடையே வன்னிப்பகுதியில் கடும் மோதல்கள் நடைபெற்ற காலப்பகுதியில் கடும் மோதல்கள் நடைபெற்ற காலப்பகுதியில் தமது குடும்பத்தினருடன் இவர் வசித்து வந்தார்.

இராணுவம் முல்லைத்தீவு பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றிய போது பொது மக்களுடன் இராணுவத் தினரிடம் தஞ்சமடைந்த இவர் வன்னிப் போரின்போது படையினருக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்த குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 6 மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

# தனித்துவத்தைப் பேண...

நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு ஆகும். இந்தக் கூட்டமைப்பில் கட்சிகள் சாராதவர்களும் அப்போதைய சூழ் நிலையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஒரு சிலர் தன்னிச்சையாக கூட்டமைப்பினருக்கே பகிரங்க ஆலோசனை வழங்குவதும் கருத்து முரண்பாட்டின் வெளிப்பாடாகவே பார்க்க வேண்டும்.

கருத்தொற்றுமையற்ற அல்லது குறை வான இணைப்புக்கள் எதுவும் தமிழின விடிவுக்கோ விமோசனத்துக்கோ உதவப் போவதில்லை. இந்த நிலையில்தமிழினவிடிவுக்காகதொடர்ந்து பாடுபட்டு வந்த அடிப்படை கொள் கைகளில் இருந்து பின்வாங்கிவிடாத கட்சியென்றவகையில் எமது தனித்துவத்தைப் பேணவேண்டிய தேவை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

கூட்டமைப்பு என்பது நாடாளுமன்றத் தேர்தலை மையப்படுத்தியதாகவோ நாடாளுமன்றப்பதவிகளைத்தக்கவைத்துக்கொள்வதற்காகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் உரித்தானதோ அல்ல. இலங்கை தமிழரசுக்கட்சி பாரம்பரிய உட்கட்சி ஜனநாயக வழிமுறைகளை பின்பற்றி வரும் ஒன்றாகும் இக்கட்சிக்கு வெளியார் எவரிடமிருந்தும் ஆலோசனைகளோ, அறிவுறுத்தல்களோ வேண்டியதில்லை.

இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பித்த காலங்களிலிருந்த அதே இலக்குகளும், நோக்கங்களும், அபிலாசைகளும், இலட்சியங்களும் இன்றும் உயிரோட்டமாகவே உள்ளன. காலத்துக்குக்காலம் இவற்றை எய்துவதற்கான போராட்ட வழிமுறைகளும் வடிவங்களும் மாறினாலும் இலட்சியங்கள் மாறுபடவோ மறையவோ இல்லை. எனவே இவற்றை நோக்கிய பயணம் தொடர வேண்டியது ஒன்றாகும். இவை பற்றிய தீர்மானங்களும் முடிவு களும் எதிர்வரும் டிசம்பர் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கட்சியின் 60 ஆவது ஆண்டு பூர்த்தி மாநாட்டின் போது வெளியிடப்படும் (ச)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஜெ.தேவராஜா அவர்களின் அன்பு மாமியார்

**அமரர் சுவாம்பிள்ளை மேரி லுவிஷா**

அவர்களின் பிரிவால் துயர்கொள்ளும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த் திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்.

(C-3722)

## Computer Express
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No.167, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 8250

1 வாரகால கற்கை நெறிகள்

கணனி ஆர்வலர்களே! ஊழியர்களே!
தங்கள் நலன்கருதி யாழ்நகரில் முதன்முறையாக
தமிழ்மொழி விளக்கத்துடன்
தொழில்சார் கணனி கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன...

**Diploma in Film Technology & Video Editing**

Adobe Photoshop
Cool 3D Studio
VCD Cutter

Capturing
Pinnacle Studio
Adobe Premiere

Internet & e mail

**Diploma in Hard ware Engineering & Net working**

System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works

Internet & e mail

**Diploma in Graphic Designing & Adverdisement Marketing**

Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio

Internet & e mail

வகுப்புக்கள் ஆரம்பம் :-16.11.2009-9Am

Free Software CDs

(C-3717)

## தொழிற் பயிற்சிகள்

எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்

☆ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியரிங்
★ றேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player
★ ரெலிவிசன் ★ CD Player ★ Amplifier காலம்:-10மாதம்

☆ Mobile Phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock
காலம்:-3மாதம்

☆ ஏயார் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:-6மாதம்

☆ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் காலம்:-6மாதம்

☆ Diploma in computer Hard ware Engineering காலம்:-3மாதம்

☆ மோட்டார் சைக்கிள் மெக்கானிசம்
நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:-6மாதம்

பயிற்சியில் சேரவிரும்புவோர் 15.11.2009 முன் விண்ணப்பத்தை பெற்று விண்ணப்பிக்கவும்

குறிப்பு: நலன்புரி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களிற்கு எந்த வித கட்டணமும் அறிவிடப்படமாட்டாது.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

No.45, மணிக்கூட்டு வீதி(பெருமாள் கோவில் முன் வீதி), யாழ்ப்பாணம்.
T.P:- 0718561654

கிளை: NEW ASIAN CENTER
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 0779254078

ஒவ்வொரு பயிற்சிக்கும் 20 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

(C-3690)

## சமகால தகவல் தொழில்நுட்பம்
## Contemporary Information Technology

நூலாசிரியர்:- Mr.S.Selvanayagam
Lecturer, Information and Communication Technology (ICT)

### பொருளடக்கம்

(1.0) பாடசாலை மாணவர்கள், உயர்கற்கை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆர்வலர்களுக்கான,
- அடிப்படைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- இணையப்பயன்பாட்டில் Internet Explorer
- CDMA தொழில்நுட்பம்
- கணினி மென்பொருள் பிரயோகங்கள்
- தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமும் சமூகமும்

(2.0) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (G.C.E. (O/L)-ICT)
- பாடத்திட்டம்
- மாதிரிவினாத்தாள்-விடைகளுடன்
- கடந்தகால வினாத்தாள்கள்-விடைகளுடன்

(ICT 2007,2008 New Syllabus,Old Syllabus)

(3.0) பொதுத்தகவல் தொழில்நுட்பம் (G.C.E. (A/L)-GIT)
- பாடத்திட்டம்
- மாதிரிவினாத்தாள்-விடைகளுடன்
- கடந்தகால வினாத்தாள்கள்-விடைகளுடன்

(GIT 2005, 2006, 2007, 2008)

(4.0) கணினி தொடர்பான கலைச்சொற்கள்

### விநியோகஸ்தர்கள்

- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- Book Lab, பல்கலைக்கழகம் முன்பாக, யாழ்ப்பாணம்
- Sri lanka Book Depot, K.K.S. Road, Jaffna
- All Ceylon Distributors, K.K.S. Road, Jaffna
- பொதிகை புத்தக நிலையம், சாவகச்சேரி
- மொடேன் புத்தகசாலை, நெல்லியடி
- பாக்கியா காகிதாதிகள், கொக்குவில்
- துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்

குறிப்பு:- மொத்தமாக கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பித்த பாடசாலைகள் எதிர்வரும் 21.11.2009ற்கு முன்பாக பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளவும்.

## e-Asia 2009

தகவல் தொழில்நுட்ப கலாசாரத்துடன் நாமும் இணைவோம்.

(C-3721)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.